

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.   www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 விடை நல்லோரை வைகாசித் திங்கள் 10ம் நாள் நிறைமதி (23-05-2024 வியாழக்கிழமை) வெளியீடு +94 21 222 9722


## திருஞானசம்பந்தர் குருபூசை



விடை நல்லோரை வைகாசித் திங்கள் 12ம் நாள் (25-05-2024) வைகாசித் துளங்கொளி (கேட்டை) நாண்மீனில் திருஞானசம் பந்தர் சுவாமிகளின் குருபூசை நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் கொண்டாடப்படும்.



அமெரிக்க கவாய்த் தீவுகளில் ஒன்றான
குவைத் தீவில் எழுந்தருளியுள்ள தென்முகக்கடவுள்

குவை சைவ ஆதீனம் - அமெரிக்கா
Kauai Saiva Adheenam - America

# திருக்கேதீச்சரத்தில் மெய்கண்டார் அறநெறி மாணவர்கள் சிவபூசை வழிபாடு





இலங்கை சைவநெறிக் கழகத்தின் சொய்சாப்புரம் மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தால் அறநெறிப் பாடசாலை மாணவர் 60 பேரும் அவர்களுடைய பெற்றோர்களுமாக 120 பேர் திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் கடந்த 18ஆம் 19ஆம் திகதித் திருவிழாப் பூசைகளில் கலந்து கொள்ள அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது, 18ஆம் திகதியன்று பாலாவித் தீர்த்தக்கரையிலும் 19ஆம் திகதியன்று திருக்கேதீச்சரத் திருஞானசம்பந்தர் மடத்திலும் அறநெறிப் பாடசாலை மாணவர் சைவ அனுட்டானமும் அன்புமார்க்க ஆன்மார்த்த சிவபூசையும் செய்து திருக்கோயில் வழிபாட்டை மேற்கொண்டனர்.

இலங்கையில் சைவ அனுட்டானமும் அன்புமார்க்க ஆன்மார்த்த சிவபூசையும் பயிற்றுவிக்கப்பட்டுவரும் சிறப்புடைய அறநெறிப்பாடசாலையாக மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலை திகழ்ந்து வருகின்றமை போற்றுதலுக்குரியதாகும்.

திருச்சிற்றம்பலம்

## இரத்தினபுரியில் அன்னையர்களைப் போற்றும் விழா



இரத்தினபுரியில் பெரியோரை கனம் பண்ணும் நற்பண்பை எடுத்துக்காட்டும் முகமாக, அபிராமி அறநெறி பாடசாலை மாணவர்களால் அன்னையர் தின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு, சிறப்பாக இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வானது 12-05-2024 அன்று இரத்தினபுரி கரபிஞ்ச அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் சொந்தமான அபிராமி அறநெறி பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

அன்றைய தினம் அன்னையர்கள் பலர் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் அன்னையர்களுக்குப் பாத பூசை வழிபாடும் இடம்பெற்றிருந்தமை போற்றுதலுக்குரியதாகும். இது பிரதேச வரலாற்றில் நடந்த முதலாவது அன்னையர் தின நிகழ்வாக அமைகிறது.

திருச்சிற்றம்பலம்

## வற்றாப்பளை வருடாந்த பொங்கல் விழா



வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் திருக்கோயில் வருடாந்த பொங்கல் திருவிழாவானது, கடந்த 13-05-2024 அன்று தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுடன் ஆரம்பமாகியிருந்தது. குறித்த கோயிலில் பொங்கல் நிகழ்வு நடத்துவதற்கு முன்பாக கடல் தீர்த்தம் எடுத்து விளக்கு எரிக்கும் நிகழ்வு ஒவ்வொரு முறையும் நடத்தப்படுகின்றமை வழமையாகும்.

அதற்கமைய இம்முறையும், கடல் தீர்த்தம் (உவர் நீர்) எடுத்து வரப்பட்டு, முள்ளியவளை காட்டா விநாயகர் கோயிலிற்கு எடுத்து செல்லப்பட்டு, அங்கு பானையில் இடப்பட்டு, அதன் பின்னர் உப்பு நீர் விளக்கு எரியவிடப்பட்டது. குறித்த விளக்கு தொடர்ந்து எரியவிடப்பட்டு, கடந்த 19-05-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காட்டா விநாயகர் கோயிலில் பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மறுநாள் திங்கட்கிழமை (20) அதிகாலை, இந்த உவர் நீர் விளக்கானது மடைப் பண்டங்களுடன் காட்டா விநாயகர் கோயிலில் இருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலிற்குக் கொண்டு செல்லப்பட்டு, அதன் பின்னர் வற்றாப்பளை கண்ணகி அம்மன் திருக்கோயில் பொங்கல் நிகழ்வுடன் திருவிழா நிறைவடைந்தது. இம்முறை பொங்கல் விழாவில் ஏராளமான அடியார்கள் பங்குபற்றி தமது நேர்த்திக்கடன் வழிபாடுகளை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

# சுவாமி விபுலானந்தரின் துறவற நூற்றாண்டு விழா

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் என்ற பெருமையினைக் கொண்ட முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 132வது அகவை தினம், அவரது துறவற நூற்றாண்டு விழாவாக மட்டக்களப்பில், கடந்த 03-05-2024 அன்று கொண்டாடப்பட்டது. சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையினரின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடியில் உள்ள சுவாமி விபுலானந்தரின் சமாதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு இராம கிருஸ்ணமிசனின் பொது முகாமையாளர் தவத்திரு. சுவாமி நீல மாதவானந்தா ஜி மஹராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் தலைவர் கே.பாஸ்கரன் மற்றும் சிவானந்தா தேசிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், விவேகானந்தா மகளிர் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இதன்போது சமாதியில் சுவாமிக்கு விசேட பூசைகள் நடைபெற்று மாலை அணிவிக்கப்பட்ட மலர் கொண்டு வழிபாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்வின்போது விசேடமாக சுவாமி விபுலானந்தரின் “வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ” பாடல் பாடப்பட்டு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த ஆண்டு சுவாமி விபுலானந்தரின் துறவறத்தின் நூற்றாண்டு நிகழ்வாக அனுட்டிக்கப்படவுள்ளதுடன் அவர் எழுதிய நூல்களை மீண்டும் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு இராம கிருஸ்ணமிசனின் பொது முகாமையாளர் தவத்திரு. சுவாமி நீல மாதவானந்தா ஜி மஹராஜ் அவர்கள் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



# அடியார் பெருமைகளை ஆவணப்படுத்துவோம்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

அடியாரைப் போற்றுவது அவனைப் போற்றுவதை விடவும் சிறப்பு. அடியாருக்கு அர் விகுதி, இறைவனுக்கு அன் விகுதி வைத்து தான் அடியார் புராணங்கள் அமைகிறன. இறைவனே அடியெடுத்துக்கொடுத்த பெரியபுராண முதற்பாடலில் இறைவனை பேசும் அன் விகுதியின் மிகுதியைக் காணுவோம்.

**உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்**
**மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்**

திருவாரூரில் அடியார்களுக்கு அடிமைபூண எண்ணிய சுந்தரருக்கு, திருவாரூர்ப் பெருமான் அடியார்களின் பெருமைகளை அசரீரியாக எடுத்துரைத்தான்.

**பெருமையால் தம்மை ஒப்பார்**
**பேணலால் எம்மைப் பெற்றார்**
**ஒருமையால் உலகை வெல்வார்**
**ஊனம் மேல் ஒன்றும் இல்லார்**
**அருமையாம் நிலையில் நின்றார்**
**அன்பினால் இன்பம் ஆர்வார்**
**இருமையும் கடந்து நின்றார்**
**இவரை- நீ அடைவாய்**

தொடர்ந்து, இறைவன் அடியார் பெருமைகளை விரித்து நீ பாடுக என்று ஆணையிட்டு, தில்லை வாழ் அந்தணர் என்று அடி எடுத்தும் கொடுத்து அருளினார். சுந்தரர் சிவன் அருள் கட்டளையை ஏற்று 11 பாடல்களால் அடியவர் பெருமை கூறும் – வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தொண்டத்தொகை என்ற பதிகத்தைப் பாடி வழங்கினார். அதில் 60 தனியடியார்கள் மற்றும் 9 தொகையடியார்கள் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. இதுவே உலகின் முதல் ஆவணக்காப்பு என்று கூறுபவர்களும் உண்டு.

சுந்தரர் பெருமானின் திருத்தொண்டர் தொகையை முன்வைத்து, நம்பியாண்டார் நம்பிகள் அடியார் வரலாற்றினை வகைப்படுத்தி “திருத்தொண்டர் திருவந்தாதி” எனும் தொகுப்பினைத் தந்தார்கள். தொடர்ந்து குன்றத்தூர் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் அடியார்கள் வரலாற்றினை “பெரிய புராணம்” எனும் பத்திச் சுவை நிரம்பிய காப்பியத்தினை எமக்கு தந்துள்ளார்கள். இவையெல்லாம் அடியார்களின் மற்றும் சைவத்தின் வரலாறுகளை ஆவணப்படுத்தும் ஒரு மாபெரும் பணியாகும்.

வரலாற்றில் கற்றுக்கொண்ட பாடங்களின் வழி, நாமும் சைவ, தமிழ் அடியார்கள், புலவர்கள், அறிஞர்கள், பெரியோர்களின் வரலாறுகளை ஆவணப்படுத்த முன்வரவேண்டும். பொதுவாக இக்கால அடியவர்கள், பேச்சாளர்கள், அறிஞர்கள் வலையொளிகளில் வலம்வரும் வாய்ப்புகள் உள்ளன. ஆகவே, நாம் சிறிது காலம் முன்னே சென்று ஆராய்ந்து, இவ்வாறான வேலைகளை, வருங்கால சந்ததியினரை முன்வைத்து, செய்யவேண்டும்.

இந்த வகையில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், திருவருள் உணர்த்தியத்தின் படி, இயலுமான ஆவணப்பணியினை சிறிய அளவிலாவது செய்யவேண்டும் என்று, அடியரைத் தேடி என்ற காணொளி நிகழ்ச்சியினைச் செய்து வருகிறது. இதில் பல அடியார்களின் வரலாறுகளை ஆவணப்படுத்தி வருகிறோம். குறிப்பாக முதுபெரும் புலவர் சைவத்திரு ந.இரா. சென்னியப்பனார் ஐயா அவர்களை ஆவணப்படுத்தி ஒரு ஆவணப்படமாகத் தயாரித்து ஆனி மாத நடுப்பகுதியில் வெளியிடவுள்ளோம். இதுபோன்று பல சைவப் புலவர்களை, பெரியவர்களை, ஓதுவார்களை, தலைவர்களை ஆவணப்படுத்த இருக்கிறோம். உங்கள் உதவிகள் குறிப்பாக நிதியுதவிகள் கிடைக்குமிடத்து இவற்றினை விரிவாகவும், விரைவாகவும் செயற்படுத்தலாம்.

ஆழமான அறிவு, அனுபவமான பதில்கள், அருள் கலந்த விடைகள், சிந்தனைத் திறன் என்று பல பெறுமதியான ஆற்றல்கள் எங்கள் முன்னோரிடம் இருந்திருக்கிறது, இருக்கிறது. அவற்றினை பக்குவப்படுத்தி, ஆவணப்படுத்தி, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லவேண்டியது எங்கள் எல்லோரினதும் கடைமையே. இது நாங்கள் மட்டுமல்ல நீங்களும் முன்னெடுக்கவேண்டிய அரும்பணி.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# குவை ஆதீன சுவாமிகள் தென்னாடு சிவமடத்திற்கு ஆதீன வெளியீடுகளை வழங்கி வைத்தார்



*குவை சைவ ஆதீனமானது, கீழைத்தேசத்துக்கும் மேலைத் தேசத்துக்கும் இடையில் மையமாக விளங்கும் கவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் 1970 ஆம் ஆண்டு 459 ஏக்கர் நிலப்பரப்பில் தவத்திரு. சுப்பிரமுனிய சுவாமிகளால் நிறுவப் பட்டதாகும். அங்கு ஆறடி உயரமான சிவநடராசரை மூலவராகக் கொண்ட கோயிலையும் நிறுவப்பட்டுள்ளது. இதுவே மேலைத்தேசத்தில் அமைந்த முதலாவது சிவன் கோயிலாகும். 16 தொன் எடையுள்ள பெரிய நந்தியை உடைய இக் கோயிலின் எட்டுக் காலப் பூசைகளையும் ஆதீனத்துத் துறவிகள் செய்து வருகின்றமைக் குறிப்பிடத்தக்கதாகும்.*

*அந்த வகையில் கடந்த 13-05-2024 அன்று, தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்கள் குவை தீவில் புனித வைலுவ நதிக்கரையில் அமைந்துள்ள இறைவன் கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றியிருந்தார். அங்கு குவை சைவ ஆதீன தம்பிரான் சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றிருந்தவேளை, குவை சைவ ஆதீன தம்பிரான் சுவாமிகள் தென்னாடு நூலத்திற்கு நூல்கள் அன்பளிப்புச் செய்து வைத்தார்.*

**திருச்சிற்றம்பலம்**

# ஊர்காவற்துறையில் சிவலிங்கத் திருமேனி திருநிலைப்படுத்தல்



*ஈழத்தில் சைவம் வளர்க்கும் பணியில் முக்கிய பங்காற்றி வரும் உருத்திர சேனை அமைப்பினரால் வழங்கி வைக்கப்பட்ட சிவலிங்கம், ஊர்காவற்துறை தம்பாட்டி நுனிபுரத்தில், கடந்த சித்திரைத் திங்கள் 8ம் நாள் (21-04-2024) வளர்பிறைக் கழுவாயுடன் (பிரதோசம்) கூடிய நன்நாளில், கிராம மக்களால் திருக்கோயில் அமைக்கப்பட்டு மிகுந்த சிறப்பாக திருக்குட நன்னீராட்டு செய்யப்பட்டுள்ளது.*

*குறித்த கிராமத்தில் சிவாலயம் இல்லாதிருந்த காரணத்தால் ஊர் மக்களால் உருத்திர சேனையிடம் சிவலிங்கம் ஒன்றிற்கான கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், சிவத்திரு. மயூரதன் அவர்களால் உருத்திர சேனையிடம் வழங்கி வைக்கப்பட்ட சிவலிங்கத் திருமேனி நுனிபுரம் மக்களிடம் கையளித்திருந்தனர். அந்த வகையில் கழுவாயுடன் கூடிய நன்னாளில் ஊர் மக்கள் கூடி எம்பெருமானை திருநிலைப்படுத்தல் செய்தனர்.*

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணக் கொக்குவிற்பதி
# ஐம்பூதநாதர் போற்றிப் பதிகம்



அந்தரத்துப் பரவெளியில்
அளவிறந்த பல்கோடி உயிர்கள் வாட்டும்
பந்தமலத் துயர்நீக்கி,
இன்புறுத்தும் பணிசெய்யக் கருணைபூண்டு,
இந்தப்பிர பஞ்சத்தை
எழில்மாயை உமிழ்ந்ததனில் இயற்றியோனே!
சுந்தரனே! கொக்குவிலில்
சுகித்துறையும் ஐம்பூத நாத! போற்றி! (01)

அண்டங்கள், அமைகோள்கள்,
அவைதாங்கும் கண்டம்பல, கடல்கள் தந்தாய்!
கொண்டொவ்வோர் உடலிந்தக்
குவலயத்தில் பிறந்து வந்துயிரொவ் வொன்றும்
பண்டமைந்த மும்மலங்கள்
பாடுகளால், வினைப்பயனால் தேயப் பண்ணி,
விண்முத்தி மேவ அருள்
கொக்குவிலில் ஐம்பூத நாத! போற்றி! (02)

ஆதிமலம் ஆணவத்தால்
ஆசை, சினம், அழுக்காறு பாலிச் சைகள்
மோதிமனம் மூட்டவெறி
மூர்க்கமுற்றுப் பாவங்கள் செய்து, செய்து,
தோதுறவே நீ வழங்கும்
தண்டனைகள் தம்மாலே சுடர்ந்து ஞானம்,
"போதும்" என்றுன் சரணாக்கும்
புகழூரின் ஐம்பூத நாத! போற்றி! (03)

மண்ணாசைப் பட்டயலான்
வாழ்வளவு, ஊர், நாடு, வவ்வும் பாவம்,
பெண்ணாசைப் பட்டயலான்
இல்லறத்தை, பெண்களினை அழிக்கும் பாவம்,
எண்ணாமல் அறம், கோடி
பொன்சொத்துக் கேங்குகின்ற பாவம் விட்டு
விண்ணாசை நாம் கொள்ள
மேம்படுத்துங் கொக்குவிலின் நாத! போற்றி! (04)

தீங்கற்ற ஆசைகளைச்
சிறகடித்துத் தேய்த்துவிடப் பிள்ளைக் காலம்,
தீங்கூட்டும் இச்சைகளுள்
சீரழிந்து திருந்துதற்குக் குமரக் காலம்,
வீங்கு புகழ் சொத்து வேட்கை
தமில்வெந்து மிளிர்வதற்குக் குடும்பிக் காலம்
ஈங்குதந்தும் உன்நாட்டம்
ஈன்கொக்கு வில்பூத நாத! போற்றி! (05)

தான்தந்த பிணிநீக்கம்,
சஞ்சலங்கள், மிடிநீக்கம் ஏத்துவோரை,
ஊனுண்டி கள்காமம்
ஒழித்துயிர்கட் கிரங்குமருள் தழுவியோரை,
ஈன்றார், குரு, முதியர்களை
இறுதிவரை காத்து வழி அனுப்பு வோரை,
வான்முத்தி பெறவைக்கும்
வளர்கொக்கு வில்பூத நாத! போற்றி! (06)

திருநீறு, சிவநாமம்,
திருமுறைகள், சிவத்தொண்டு போற்று தற்கும்,
அருளோங்கு தலந்தோறும்
அன்றாடம் திரிந்தேத்தி மகிழ்வதற்கும்,
பிரசங்கம், உபதேசம்
தமைமாந்திப் பேரின்பம் நுகர்வதற்கும்
தருவாயே பேரூக்கம்
சால்கொக்கு வில்பூத நாத! போற்றி! (07)

நீ படைத்த நிலமாகி,
நீ படைத்த நீராகி, காற்று மாகி,
நீயெடுத்த தீயாகி,
நீநடித்த வெளியாகி, யாவு மானோய்!
பூ சொரிந்து பூசையிட்டு,
பூதொடுத்து மாலையிட்டுப் போற்றி யுன்னைப்
பாசொரிந்து பாரேத்தக்
கொக்குவிற் பதிவாழும் நாத! போற்றி! (08)

ஓரீர்உன் அடிக்கீர்த்து,
ஊத்தையர்கள் கால்வீழல் தடுத்தாண் டோனே!
யாரே திடர்செயினும்
அவர்த்தடிய நான்மட்டு மேஎன் றோனே!
சோராமல் தொழுவோர்க்குக்
கோராதே தூயவைகள் அருளு வோனே!
சீராரும் பார்மையத்
தில்லையனே! கொக்குவிலின் நாத! போற்றி! (09)

சிவனும் நீ! முருகன் நீ!
திருமால், ஐங்கரன், ஐயனாரும் நீயே!
சிவையும் நீ! வைரவர் நீ!
தெய்வங்கள் என்பவை யாவும் நீயே!
இவர்களிலே எவரை நாம்
ஏத்தினும் அவராய் வந்தருளு வாயே!
சிவபூமி ஈழத்தின்
திருநகர் கொக்குவில் பூதநாத! போற்றி! (10)

**பாடியவர் - பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம், இனுவில்**



யாழ் மற்றும் வன்னிப் பிரதேசங்களிலுள்ள முப்பதிற்கும் மேற்பட்ட திருத்தலங்களைப் போற்றித் திருப்பாடல்கள் பாடியுள்ள, பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம் ஐயா அவர்களினால், கொக்குவில் தென்னாடு ஐம்பூதநாதர் மீது போற்றிப் பதிகம் இயற்றப்பட்டு, 07-05-2024 அன்று கனடாவில் அவரது இல்லத்தில் வைத்து தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் பஞ்சாட்சரம் ஐயா அவர்கள் எழுதிய "30 கோவில் நூல்கள் (யாழ், வன்னி)" என்ற நூலினையும் தென்னாடு நூலகத்திற்கு வழங்கி வைத்திருந்தார். பஞ்சாட்சரம் ஐயா அவர்களின் சைவத்தமிழ்ப் பணியினைப் பாராட்டி தென்னாடு மடத்தின் சார்பாக, சிறப்புச் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தமைக் குறிப்பிடத்தக்கது.



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(19-04-2024) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் அமையப் பெற்றுள்ள ‘தனலட்சுமி வாசா’ இல்லத்தைப் பிறப்பிடமாக கொண்ட, திருமதி. இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய ‘ஊரும் உறவும் எனது வாழ்வும் ‘ என்ற நூல் வெளியிடும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வானது தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் மாலைப் பூசை வழிபாடுகளுடன் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருமதி. இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அவர்களின் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(23-04-2024) – சித்திரை நிறைமதி வழிபாடுகளுடன், பிதிர் வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன.

(23-04-2024) – தென்னாடு திங்கள் இதழின் நாற்பத்து நான்காவது இதழ் வெளியீடு, சித்திரைத் திங்கள் 10ம் நாள் செவ்வாய்க்கிழமை அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி மேலாளர் சிவத்திரு. க. விஜயகுமார் அவர்கள், உரும்பிராயைச் சேர்ந்த சிவத்திரு. ம. மயூரதன் அவர்கள் மற்றும் சைவ மாணவர் சபை உறுப்பினர்களுடன் அடியார்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்நாளில் சித்திரை நிறைமதி வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன.

(02-05-2024) – சிவத்திரு. குணரத்தினம் சுகந்தீபன் அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(03-05-2024) – அப்பர் சுவாமிகளின் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(05-05-2024) – சித்திரைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(07-05-2024) – யாழ் மற்றும் வன்னி ஆகிய பிரதேசங்களிலுள்ள முப்பதிற்கும் மேற்பட்ட திருத்தலங்களைப் போற்றித் திருப்பாடல்கள் பாடியுள்ள, பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம் ஐயா அவர்களினால், கொக்குவில் தென்னாடு ஐம்பூதநாதர் மீது போற்றிப் பதிகம் இயற்றப்பட்டு, 07-05-2024 அன்று கனடாவில் அவரது இல்லத்தில் வைத்து தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் பஞ்சாட்சரம் ஐயா அவர்கள் எழுதிய ‘30 கோவில் நூல்கள் (யாழ், வன்னி)’ என்ற நூலினையும் தென்னாடு நூலகத்திற்கு வழங்கி வைத்திருந்தார். பஞ்சாட்சரம் ஐயா அவர்களின் சைவத்தமிழ்ப் பணியினைப் பாராட்டி தென்னாடு மடத்தின் சார்பாக, சிறப்புச் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தமைக் குறிப்பிடத்தக்கது.

(09-05-2024) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நெறிப்படுத்தலில், சித்திரை 27ம் நாள் மும்மைப்பிறை நாள் அன்று கனடா ரொரோன்ரோ மாநகரில் ஞானச்சந்திரன், கார்த்திகா அவர்களின் இல்லத்தில் எழுந்தருளி இருக்கும் பசுபதிநாதப் பெருமானுக்கு சிறப்புப் பூசைகள் நடைபெற்று, ஞானச்சந்திரன் அவர்களின் தாயார் பத்மநிதி இராசலிங்கம் அவர்களின் திதி வழிபாடும் செந்தமிழ் ஆகம முறையில் சிறப்பாக நடைபெற்றன.

(13-05-2024) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்கள் அமெரிக்க கவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் அமைந்துள்ள இறைவன் கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றியிருந்தார். அங்கு குவை சைவ ஆதீன தம்பிரான் சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றிருந்தவேளை, குவை சைவ ஆதீன தம்பிரான் சுவாமிகள் தென்னாடு நூலத்திற்கு நூல்கள் அன்பளிப்புச் செய்து வைத்தார்.

**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்

**சரபர் கதை முதலியன திருமாலைத் தாழ்த்துவதற்குச் சைவர் புனைந்து கொண்டதாகவே வைணவர் கூறுகினர். இது உண்மையாகுமா?**



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**ஒருவனே மூவர் என்றும் ஒன்பது தினமும் அன்பால் பரமனை அருச்சித்தாரும் பாம்பு அணைப் பள்ளி வள்ளல் புரம் அதுபொருந்தி வாழ்வர்** - சிவதருமோத்தரம் (சைவ உப ஆகம நூல்)

**பாம்பு அணைப் பள்ளியானைப்**
**பழிமொழி பகர்ந்த பாவி**
**கோம்பியாய் உதர அங்கி**
**கூர்ந்திடக் குலையும்** - சிவதருமோத்தரம் (சைவ உப ஆகம நூல்)

*சிவபெருமானே மூவராய் விளங்குகின்றார் என்றும், உயிர்வர்க்கப் பிரம்மா -உயிர்வர்க்கத் திருமால் முதலியோருக்கு அந்தர்யாமியாக இருந்து அவர்களையும் அதிட்டித்து ஆட்டிவைப்பவர் சிவபெருமானே என்றும் தெளிந்து சிவபெருமானை ஒன்பது நாள் முறையாக வழிபடுவோருக்குத் திருமால் பதவியைச் சிவபெருமான் கொடுத்தருளுகின்றார் என்றும், திருமாலை நிந்திப்பவர் ஓணானாய்ப் பிறப்பர் என்றும் சைவாகம உபாகமமாகிய சிவதருமோத்திரம் கூறுகின்றது. எனவே, அவதாரத் திருமால் பதவியென்பது சிவபெருமானை ஒன்பது நாள் முறைப்படி பூசிக்கும் உயிருக்குக் கிடைக்கக்கூடிய ஒரு பதவியேயென்பதும், அப்பதவியில் இருப்பவர் சிவபெருமானைப் பூசிக்கும் சிவபத்தரேயென்பதால் அவரை நிந்தித்தல் சைவருக்குக் கூடாவென்பதுதான் சைவமுடிவாகும்.* **“ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ”** *என்று திருமாலின் சிவபத்தியைப் போற்றிய மாணிக்கவாசகப்பெருமான்,* **“கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு குடிகெடினும் நள்ளேன் நினது அடியாரொடு அல்லால் நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறின் இறைவா உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது எங்கள் உத்தமனே”** *என்றும் அறிவுறுத்தி அருளிச்செய்துள்ளார். இதுவே சைவ வாழ்வியல் வழியாகும்.*

*நாயன்மார்களாகிய சிவனடியார்கள் சிவபெருமானையே வேண்டி நின்ற அருளாளர்களாகும். நாயன்மார்கள்* **“சித்தமலம் அறுவித்துச் சிவமாகி”** *நின்ற உயிர்வர்க்கமாகும். திருமால் சக்கரம்,வைகுண்டப்பதவி முதலிய நிலையிலா இன்பத்தின் பொருட்டு சிவபெருமானை வழிபட்ட சிவபத்தராகும். திருமால் உலகியற் பதவியில் தோய்ந்து நிற்கும் உயிர் வர்க்கமாகும். நாயன்மாரை வழிபட்டால் அது சிவவழிபாடாகவே முடிவுறும்.* **“பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை”** *என்று சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்தவாறு, நாயன்மார் வழிபாடு இகபர (உலகியல் இன்பங்களையும் முத்தியின்பத்தையும்) சுகங்களை அருளவல்லது. ஆனால், உயிர்வர்க்கத் திருமாலை வழிபட்டால் அது சிவபெருமானின் அதிட்டித்தலில் உலகியல் இன்பத்தினை மட்டுமே கொடுக்கக் கூடியதாய் சுருங்கியது. மேலும், உயிர் சார்ந்ததன் வண்ணம் என்பது சைவமுடிவு. எனவே, நாயன்மாரை வழிபடும்போது இகபர சுகங்களை சிவசமர்ப்பணமாக அனுபவித்து முத்தியின்பத்தில் உயிர் பயணிக்கும். உலகியற் சுகங்கள் பொருட்டு சிவபெருமானை வழிபட்டோரினை வழிபட்டால், அந்த உலகியல் இன்ப துன்பங்களிலேயே உழன்றுகொண்டிருக்க வேண்டியதாகிவிடும். இராவணாதியர் எங்ஙனம் உலகியற் தேவையின்பொருட்டு சிவபெருமானை வழிபட்டனரோ, அவ்வாறே உயிர்வர்க்கத் திருமால் முதலியோரும் உலகியற் தேவையின்பொருட்டே சிவபெருமானை வழிபட்டவராவர். எனவேதான், அருணந்தி சிவசாரியப்பெருமானும் சிவஞானசித்தியாரில்* **“அயன் திருமால் செல்வமும் ஒன்றோவென்னச் செய்யும் தேவே”** *என்று அருளிச்செய்துள்ளார். எனவேதான்,* **“ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ”** *வென்று அருளிச்செய்த மாணிக்கவாசகப் பெருமான்,* **“கொள்ளேன் புரந்தரன் மால் அயன்”** *என்று திருமால் முதலியோரின் உயிர்வர்க்கத் தராதரத்தையும் உணர்த்தியருளுகின்றார். எனவே, சைவத்தில் திருமால் நிந்தனை ஏற்கப்படவில்லையேயொழிய, வைணவர் பரமென்றும் சுமார்த்தமதத்தார் சகுணப்பிரமத்தின் மங்கலவடிவென்றும் மயங்கி நிற்கும் நிலை சைவத்திற்கு ஏற்புடையதல்ல என்பதனை அறிவுறுத்திச் சைவசமயத்தில் உயிர்வர்க்கத் திருமாலின் தராதரத்தை உணர்த்தும் பாங்கு வலியுறுத்தப்பட்டுவரும் ஒன்றாகும்.*

*சைவசமயம் பிறப்பென்பதே வினைவசத்தால் வருவதென்பதுதான் முடிவாகக் கூறுகின்றது. சிலப்பதிகாரம்* **“பிறவா யாக்கைப் பெரியோன்”** *என்று சிவபெருமானைப் போற்றுவதும் தமிழர் மரபில் பிறப்பென்பதை இறைவனுக்கு கற்பித்தால் இறைவன் வினைக்கு உட்பட்ட வன் ஆகிவிடுவான் என்னும் உயர்ந்த மரபைப் போற்றும் வகையிலேயேயாகும். பிறப்பும் இறப்பும் இல்லாத சிவபெருமானே பரம்பொருள் என்பதில் சைவருக்குத் தெளிவிருத்தல் அவசியமாகின்றது. சைவசமயம் புவனங்கள் யாவற்றையும் நிவர்த்திகலை, பிரதிட்டை கலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என்று ஐவகையில் வரிசைப்படுத்திக் கூறும். இதில் நிவர்த்திகலையில் 108 புவனங்களும் பிரத்திடைகலையில் 56 புவனங்களும் வித்தியாகலையில் 27 புவனங்களும் சாந்திகலையில் 18 புவனங்களும் சாந்தியதீதகலையில் 15 புவனங்களுமாக முதன்மைப் புவனங்கள் 224 உண்டென்று சைவம் கூறுகின்றது. இதில், நிவர்த்திகலை பிரதிட்டைகலை புவனங்கள் பிரகிருதிமாயைத் தத்துவத்திற்குரியது. எனவே, இங்கு நிவர்த்திகலையில் தமது மகாப்பிரம்மாவடிவத்தினால் (சம்புபட்ச பிரம்மா) உயிர்வர்க்கப் பிரம்மாவை அதிட்டித்து பஞ்சகிருத்தியத்தையும், பிரதிட்டைக்கலையில் தமது மகாவிஷ்ணு (சம்புபட்சத் திருமால்) வடிவத்தினால் உயிர்வர்க்கத் திருமாலை ஏவிநின்று அதிட்டித்து பஞ்சகிருத்தியத்தையும் செய்வார். பிரகிருதிமாயைத் தத்துவத் திற்கும் மேம்பட்ட அசுத்தமாயைத் தத்துவத்திற்கு உரியதே வித்தியாகலையாகும். இங்கு மகாருத்திரர் வடிவம் தாங்கி உருத்திரரை அதிட்டித்து ஏவிநின்று பஞ்சகிருத்தியத்தைச் செய்வார். சாந்திகலையும் சாந்தியதீதகலையும் சுத்தமாயைப் புவனங்களையுடையது. எனவே, இங்கு சிவபெருமான் தாமே மகேசுவரவடிவமும் சதாசிவவடிவமும் தாங்கி பஞ்சகிருத்தியத்தைச் செய்வார்.*

(தொடரும்)

**எல்லாம் திருவருட் சம்மதம்**




**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
**ஆசிரியர் – தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



## தென்புலத்தோரை வழிபடுவோம்!

இல்வாழ்வில் இருக்கும் ஒருவன் தென்புலத்தாராகிய முன்னோருக்கு செய்ய வேண்டிய கடமைகளை சைவ சமயம் வலியுறுத்துகிறது. இறந்தவர்களை நினைவுகூருவதற்கும், அவர்கள் பெயரால் தான தருமங்களை செய்வதற்கும், பல்வேறு வழிமுறைகளையும் நடைமுறைகளையும் சடங்குகளாக எம் முன்னோர்கள் உருவாக்கி வைத்திருந்தார்கள். இவை இறந்துபோனவர்களின் வரலாறு வரும் தலைமுறையினருக்கு கடத்தப்படுவதற்கும், பிறப்பு இறப்பு குறித்த சமநிலை மனதைப் பெறுவதற்கும், துக்கத்தில் இருந்து வெளிவந்து உலக ஒழுத்தில் நம்மைச் செலுத்தவும் வழிகோலின.

மறைந்த மூதாதையரை வழிபடும் முறைகள் இடத்துக்கிடம், ஊருக் ஊர் வேறுபடும். ஒருவர் இறந்தபின் அவர் உடலை, தலை தெற்குத் திசையில் இருக்க வளர்த்தி தலைமாட்டில் ஒரு விளக்கைக் கொளுத்தி வைப்பார்கள். இறந்தவர் உடல் எரியூட்டப் படும் வரை அந்த வீட்டில் அடுப்பு எரிக்கமாட்டார்கள். அதன்பின்னே அந்தியேட்டி வரை இறந்தவரை வளர்த்தி இருந்த இடத்தில் தெற்குப்பக்கமாக விளக்கு இரவு பகலாய் எரியும். விளக்கடியில் ஒரு தண்ணீர்ச் செம்பு நாளாந்தம் மூன்றுநேரமும் புதிதாக வைக்கப்படும். மூன்றுநேரமும் விளக்கடியில் உணவு வகைகள் படைக்கப்படும்.

இறந்தநாளை முதலாவது நாளாகக் கொண்டு அனேகமாக மூன்றாம் நாள் காடாற்று, பால்தெளித்தல், சாம்பல் அள்ளுதல் செய்வர். அதேபோல ஐந்தாம் அல்லது ஏழாம் நாளில் எட்டுச்செலவுப் படையல் நடைபெறும். எட்டு ஸ்ரீ எள்ஷ்தூ அதாவது எள்தூவுதல் என்பதன் சுருக்கமே அன்றி எட்டாம்நாள் என்ற கருத்தல்ல. ஆனால் எள் தூவுதல் என்பது எட்டிலன்று இப்போது இல்லை. பின்பு முப்பத்தியோராம் நாள் அந்தியேட்டி வரை விளக்கடியில் தங்களால் இயன்ற வசதிக்கு ஏற்றபடி தின்பண்டங்களைப் படைப்பர். அந்தியேட்டியில் மரக்கறி உணவு படைக்கப்படும். அதன்பின்னே அடுத்தடுத்த நாட்களில் அவரவர் வசதிக்கேற்ப மச்சப்படையல் வைப்பார்கள். இறந்தவர் மது, புகை பழக்கம் உள்ளவராயின் அவைகளும் படையலில் இடம் பெறும்.

இவை சமய நடைமுறைகளைத் தாண்டிய வாழ்வியலோடு ஒட்டிய நினைவுகொள்ளும் முறையாகவே நாம் கருத வேண்டும். இதன் பின்பு வருடாவருடம் வரும் திதியில் மரக்கறி உணவுப் படையலும், மறு தினங்களில் மச்சப்படையலும் இருக்கும். இது ஈழத்து தமிழர்களின் பொதுவான நடைமுறையாக காலம்தோறும் இருந்து வருகின்றது.

ஒருவர் இறந்தவுடன், மரணச்சடங்கை எப்படி நிகழ்த்தவேண்டும் என்கின்ற ஆழ அகலமான நடைமுறைகளும் எம்மத்தியில் மரபாகப் பேணப்படுகின்றது. இவை இங்கனம் இருக்க, நாட்டில் ஏற்பட்ட போரின் காரணமாக உயிர் நீத்து முறைப்படி மரணச்சடங்கினை செய்ய முடியாது போன எம் உறவுகளுக்காக, அவர்களின் ஆன்மாக்களும் சிவப்பேறு கிட்ட நாம் அவர்களை எண்ணியும் வழிபட வேண்டும். முன்னவர்களை வழிபடுவது எமது தலைமுறை நீட்சியையும் துன்ப மீட்சியையும் தரும் என்கின்ற பழைய காலம் தொட்டு இருக்கின்ற நம்பிக்கையினையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நாட்டில் பல்வேறு இடங்களில் போற்றத்தக்க வகையில் பலதரப்பட்ட நினைவேந்தல்கள் நடந்தாலும், தென்புலத்தார் வழிபாடும் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முறைப்படி செய்ய வேண்டியதும் காலத்தின் கட்டாயம் ஆகும். ஆன்மாக்கள் உலகியலில் இருந்து விடுபடவும் வீடுபேறு அடைவதற்கும் இவை துணைசெய்யும்.

தென்புலத்தார் வழிபாடு, நடுகல் வழிபாடாக, பத்தினித் தெய்வ வழிபாடாக எம்மத்தியில் நிலவுகின்றது. ஏதோ ஒரு உயர்ந்த நோக்கத்திற்காக தம் உயிர்களை தியாகித்தவர்களை கடவுளர்களாகக் கருதி வழிபாடு செய்யும் முறையும் எம்மத்தியில் இருக்கின்ற ஒன்றே. எனவே எம் முன்னோர்கள் ஏதோ ஒரு வகையில் தம் தலைமுறைக்காக தியாகித்தவற்றை எண்ணி இப்போது வாழும் தலைமுறைகள் அவர்களை எண்ணி வழிபாடு செய்து உய்வு பெறுவோமாக!

**திருச்சிற்றம்பலம்**

# தமிழ்வேதமாகிய திருக்குறளில் சைவசித்தாந்தம்

**திருச்சிற்றம்பலம்**



செந்நெறிச் செல்வர் அமரர்
சிவத்திரு.கு.வைத்தியநாதன்
திருவாவடுதுறை ஆதீன
சைவசித்தாந்த
நேர்முகப் பயிற்சி மைய முதல்வர்

மேலை நாட்டிலிருந்து, கிறித்துவத்தைப் பரப்பும் பொருட்டுத் தமிழ் நாட்டிற்கு வருகை தந்த போப்பையர் அவர்கள், திருக்குறளின் சிறப்பைக் கேள்வியுற்று, அதனைக் கற்க வேண்டும் என்னும் பெரு நோக்கில், தமிழ் மொழியை முதலில் கற்றார். திருக்குறள் முழுவதையும் பழுதறக் கற்று, அதன் பொதுமையை உலகம் முழுவதும் அறிய வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணத்தில், அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். போப்பையர் அவர்கள் **“குறள் நெறி”** (Ethics of Kural) என்னும் ஆங்கில நூலையும் செய்தார்.

Thiruvalluvar bases his ethics on the grand truths of Tripathartha PATHI. PASU, PASAM, In fact, his creed is not a godless creed, like that of Jains or Buddhists. In this respect, there is a disparity between “Naladi” and this work’

என்று போப்பையர் அவர்கள் கூறியுள்ள கருத்து, ஆழ்ந்த சிந்தனைக்குரியது ஆகும். இதன் தமிழாக்கம் பின் வருமாறு,

திருவள்ளுவர் பதி,பசு,பாசம் என்னும் சிறந்த முப்பொருள் உண்மையின் அடிப்படையிலேயே தமது சமயக் கோட்பாடுகளை அமைத்துள்ளார். சமணர்களும் பௌத்தர்களும் கொள்வது போல், **“கடவுள் இல்லை”** என்னும் கொள்கையில் திருவள்ளுவர்க்கு உடன்பாடு இல்லை. இந்த வகையில் நோக்கும் பொழுது, **“நாலடியார்”** என்னும் சமண நூலில் உள்ள கருத்துக்கும் திருக்குறட் கருத்துக்கும் பெரும் வேறுபாடு உள்ளது.

வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து, உண்மையை உணர வேண்டும் என்னும் ஒரே நோக்கில், எந்தவிதக் காய்தல் உவத்தல் இன்றித் திருக்குறளையும் பிற தமிழ் நூல்களையும் கற்றுத் தெளிந்த ஒரு பெருமகனார் கூறும் இந்தக் கருத்தில், எந்தவித ஒரவாரமும் (பாரபட்சம்) இருக்க முடியாது என்பதை நேர்மையாகச் சிந்திப்பவர் எவரும் அறிவர். போப்பையர் அவர்கள் கூறிய இந்தக் கருத்து, கீழ்க்காணும் உண்மைகளைத் தெளிவுறுத்துகின்றது.

- திருவள்ளுவர் உலோகாயதரின் ‘கடவுள் இல்லை’ என்னும் கொள்கையை உடன்படவில்லை.
- திருக்குறளில் உள்ள சமயக் கோட்பாடு, சமண பௌத்த சமயக் கோட்பாடுகளோடு பொருந்துவது அன்று.
- திருவள்ளுவர் சைவ சித்தாந்தக் கொள்கைகளையே தமது சமயக்கோட்பாடாகக்கொண்டிருக்கிறார்.

திருவள்ளுவர் வாழ்ந்த காலம் கி. மு. 31 என்பது பெரும் பாலான வரலாற்று அறிஞர்களின் முடிவு. அஃதாவது இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐம்பத்து ஐந்து (2055) ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் திருவள்ளுர் என்பது தெளிவு. எனவே, கிறித்துவ சமயம் தோன்றுவதற்கு முன்பே, திருக்குறள் தோன்றியது என்பது இதன்வழி பெறப்படும்.

புறநானூற்றுள், காக்கைப் பாடினியார் என்னும் பெரும் புலவர் எழுதிய **“நரம் பெழுந்துலறிய”** எனத் தொடங்கும் செய்யுளில், **“ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே”** என்னும் தொடர் இடம் பெறுகிறது. இத்தொடர் **“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்”** என்னும் திருக்குறட்பாக் கருத்தை மேற்கொண்டு அமைந்துள்ளது என்று கொள்ளலாம்.

ஆலத்தூர் கிழார் பாடிய புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில், திருவள்ளுவர் அருளிச் செய்த **“எந் நன்றி சொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு”** என்னும் குறட்பாக் கருத்து இடம் பெறுகின்றது அந்தப் புறநானூற்றுப் பகுதி வருமாறு,

**“நிலம் புடை பெயர்வ தாயினும், ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் என,**
**அறம் பாடிற்றே ஆயிழை கணவ”**

**தமிழ்வேதம் தொடரும்...**

# சிவயோக சுவாமிகளின் அருட்தீக்கை பெற்ற துறவுச் சீடர் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்



அமெரிக்க குவை சைவ ஆதீன நிறுவுனர் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்

சிவயோக சுவாமிகளின் அருட்தீக்கை பெற்ற பிரதான துறவுச் சீடர்களுள் ஒருவராகிய சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளே அடியேனின் குருதேவர். பிறப்பால் அமெரிக்கரான இவர் 1927ஆம் ஆண்டு தைத் திங்கள் 5ஆம் தேதி கலிபோர்னியாவில் பிறந்தார். இளம் வயதிலேயே ஆன்மீக தாகம் கொண்ட இவர் கீழைத்தேசம் நோக்கி வந்தார். அக்காலத்தில் அளவெட்டி கிராமத்தில் வாழ்ந்த கந்தையா செட்டியார் என்ற சிவயோக சுவாமிகளின் அடியவர், 1949ஆம் ஆண்டு வைகாசி பூரணை தினத்தன்று அந்த இளைஞனை கொழும்புத் துறையில் உள்ள சிவயோக சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு அழைத்து வந்தார். அவரின் வருகையை எதிர் பார்த்திருந்த சிவயோக சுவாமிகள் அவருக்கு சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் தீக்கை நாமம் அளித்தார்.

சிவயோக சுவாமிகள் குருதேவருக்கு திருவைந் தெழுத்து மந்திரத்தை போதனை செய்து அவரின் வாழ்வின் பணிகள் குறித்து அறிவுரைகளையும் வழங்கினார். சிவயோக சுவாமிகள் குருதேவரின் முதுகிலே பலமாக ஓங்கி அடித்து "இந்த அடி அமெரிக்காவிலே கேட்கும்! இனி உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ச்சிப்பாய். நீ பல ஆலயங்கள் அமைத்து பலருக்கு உணவளிப்பாய்" என்று



அமெரிக்க குவை சைவ ஆதீன குருமுதல்வர் மற்றும் சுவாமிகள்

ஆசி வழங்கினார். இந்த அடி குருதேவரை நாதர் சித்தர் மரபில் சேர்க்கும் தீக்கையாக அமைந்தது. யாழ்ப்பாண மக்கள் இந்த அரிய நிகழ்ச்சியை ஒரு முடிசூட்டு விழா என்று கூறி மகிழ்ந்தனர். அப்போது குருதேவருக்கு வயதோ இருபத்தியிரண்டு, சிவயோக சுவாமிகளுக்கோ எழுபத்தியேழு.

சுப்பிரமுனிய சுவாமிகள் இலங்கையில் இருந்த காலத்தில் சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் அளவெட்டி எனும் கிராமத்தில் அருள்மிகு சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை நிறுவினார். இன்று உலகளவில் சேவையாற்றி வரும் சைவசித்தாந்த தர்ம சபை இங்கு தான் ஆரம்பமாகியது. சிவயோக சுவாமிகளின் ஆணைப்படி குருதேவர் அமெரிக்காவுக்கு திரும்பி வந்து ஏழு ஆண்டுகள் தாம் செய்ய வேண்டிய பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். சிறந்த பத்தியாலும் ஆழ்ந்த தியானத்தாலும் சித்தர்கள் போல் சித்துக்கள் செய்யும் அக ஆற்றல்கள் குரு தேவருக்கு வெளிப்பட்டன.

1957 ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் சுப்பிரமுனிய சுவாமிகள் கலிபோர்னியாவில் இமாலய கலாபீடத்தை நிறுவி அமெரிக்காவின் முதலாவது சைவக் கோயிலையும் நிறுவினார். கீழைத்தேசத்துக்கும் மேலைத் தேசத்துக்கும் இடையில் மையமாக விளங்கும் கவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் 1970 ஆம் ஆண்டு 459 ஏக்கர் நிலப்பரப்பில் குருதேவர் குவை சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறடி உயரமான சிவநடராசரை மூலவராகக் கொண்ட கோயிலை நிறுவினார். இதுவே மேலைத்தேசத்தில் அமைந்த முதலாவது சிவன் கோயிலாகும். 16 தொன் எடையுள்ள பெரிய நந்தியை உடைய இக் கோயிலின் எட்டுக் காலப் பூசைகளையும் ஆதீனத்துத் துறவிகள் செய்து வருகின்றனர்.

குருதேவருக்கு 1975 ஆம் ஆண்டு மாசித் திங்களில் சிவபெருமான் ஓர் அகக்காட்சி அருளினார். இந்த அகக் காட்சியின் படி புனித வைலுவ நதிக்கரையில் குருதேவர் ஒரு சுயம்பு இலிங்கத்தைக் கண்டார். இச்சுயம்பு இலிங்கத்தை மையமாகக் கொண்டே சன்மார்க்க இறைவன் கோயில் உருவாகி வருகின்றது. சன்மார்க்க இறைவன் கோயில் நுழைவாயிலில் ஓர் உருத்திராக்க மரச்சோலை உண்டு. இச்சோலையில் இருந்து கோயிலுக்கு இரு மருங்கிலும் கொன்றை மரங்களையுடைய ஒரு நீண்ட நேரிய பாதை, இதுவே சன்மார்க்கம். இப்பாதையில் ஓர் ஆலமர நிழலில் விநாயகப் பெருமான் எழுந்தருளி உள்ளார். அவரிடம் விடைபெற்றுச் செல்லும் போது வழியில் ஒரு குன்றின் மேல் முருகப்பெருமான் காட்சி தருகின்றார். அவரையும் வணங்கி நேரே சென்றால் சுயம்பு இலிங்கேச்சரரை நாம் அடையலாம். நூற்றியெட்டு வில்வ மரங்களுக்கு மத்தியில் வீற்றிருக்கும் இந்த சுயம்பு இலிங்கேச்சரருக்கு 1975ஆம் ஆண்டு முதல் நாள்தோறும் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

இறைவன் கோயிலில் திருநிலைப்படுத்தல் செய்யவென ஒரு படிக இலிங்கம் குருதேவருக்கு 1987 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் கிடைக்கப் பெற்றது. இது ஆறு கோணங்களையுடைய 700 இறாத்தல் எடையும் 39 அங்குல உயரமும் கொண்ட அற்புதமான உலகின் மிகப் பெரிய படிக இலிங்கமாகும். இறைவன் கோயில் முற்றிலும் கருங்கற்களினால் ஆகம விதிப்படி அமைந்த கோயிலாக பல தலைமுறைகளுக்கு நிலைத்து நிற்கக் கூடிய வகையில் உருவாகி வருகின்றது.

1979 ஆம் ஆண்டு குருதேவர் HINDUSIAM TODAY என்னும் சஞ்சிகையை ஆரம்பித்தார். இந்தச் சஞ்சிகை உலகெங்கும் வாழும் சைவர்களின் குரலாக சர்வதேமட்டத்தில் ஒலிக்கின்றது. சைவசமயம் பற்றிய பல நூல்களையும் குருதேவர் எழுதியுள்ளார். இன்று இவை பலமொழிகளில் எமக்கு கிடைக்கின்றது. இந்தத் தொழில்நுட்ப காலத்தில் குருதேவரின் துறவிகள் அதி நவீன கணனிகளின் துணையுடன் பல நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றனர். அமெரிக்காவிலும், மேலைத் தேசங்களிலும் பல சைவக் கோயில்கள் உருவாக குருதேவர் மூலகாரணமாக இருந்துள்ளார். உலகெங்கும் கோயில்களைக் கட்டிவரும் சைவ சமூகத்தினருக்கு ஆலோசனைகளை வழங்கியும், அவர்களின் கோயில்களுக்கு இறைபடிமங்களை வழங்கியும், இடையிடையே இந்தக் கோயில்களுக்கு நேரில் சென்றும் குருதேவர் அவர்களை வழிநடத்தி வந்தார்.



தவத்திரு. ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்

1982 ஆம் ஆண்டு சுப்பிரமுனிய சுவாமிகள் கோப்பாயில் அருள்மிகு சுப்பிரமுனிய கோட்டத்தை நிறுவினார். 1983 இல் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தின் பின் சுவாமிகள் 'இலங்கைத் தமிழர் அகதி நிவாரணநிதி' என ஒரு நிதியத்தை உருவாக்கி அதன் மூலம் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கியுள்ளார். 'இந்து கலாசார அறக்கட்டளை' என்னும் ஒரு நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலம் சிறுவர், முதியோர் இல்லங்கள், சமய நிறுவனங்கள் போன்றவற்றுக்கு உதவி வந்துள்ளார்.1986 இல் புதுடில்லியில் கூடிய உலக சமய பாராளுமன்றத்தில் குருதேவரின் உலகளாவிய சமயப்பணியைப் பாராட்டி அவருக்கு 'ஜகதாச்சாரியர்' என்ற விருதினை வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் உயர் திரு ஊத்தான் அவர்களின் நினைவாக வருடாந்தம் வழங்கப்படும் சமாதானப் பரிசு 2000 இல் சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது. இத்தருணம் ஐக்கியநாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டிலும் குருதேவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

குருதேவர் 12-11-2001 திங்கட்கிழமை நள்ளிரவு 11-54 மணிக்கு அறுவை (சித்திரை) நாண்மீனில் கவாயில் உள்ள தனது சைவ ஆதீனத்தில் துறவிகள் சூழ்ந்திருக்க சமாதி அடைந்தார். குருதேவரின் திருமேனி தகனம் செய்யப்பட்டு சாம்பல் ஆதீனத்தில் உள்ள சிவநடராசரின் சன்னிதியின் கீழே ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த குகையில் திருநிலைப்படுத்தல் செய்யப்பட்டது.

சமாதியடையும் போது தனது அடியவர்களிடம் குருதேவர் தான் இந்த உடலை விட்டு நீங்கினாலும் தினமும் இருபத்து நான்கு மணிநேரமும் அகவுலகிலிருந்து அடியவர்களுக்கு அருள் தருவேன் என்று கூறினார். குருதேவர் ஆரம்பித்த சிவப்பணிகளை ஆதீனத்துத் துறவிகள், தற்போதைய ஆதீனகுரு முதல்வர் சற்குரு போதிநாதவேலன் சுவாமிகளின் தலைமையில் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகளின் திருவடியின் கீழ் கவாய் சைவ ஆதீனத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தமை எனது வாழ்வில் கிடைத்த பெரும்பேறு. எனது ஆன்மீக வாழ்வை ஆற்றுப் படுத்திய குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகள் சமாதியடையும் போது அவரது அருகில் இருந்தமை எனது பிறவிப்பயனும், தாய், தந்தை, குரு, தெய்வம் ஆகியோரின் கருணையுமாகும்.

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் - தவத்திரு. ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்

**"யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும் சர்வ தேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும் " - ஆய்வுக் கட்டுரை - 25 மார்ச் 2022**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**இறைவன் கொண்ட திருமேனி மந்திரத் திருமேனி என்று கூறப்படுகிறது. இது குறித்த விளக்கம் என்ன? எந்த நூலில் இதனைக் காணலாம்?**

இறைவன் கொண்ட திருமேனி மந்திரத் திருமேனி என்ற கருத்துள்ள நூல்கள் உண்டு. உண்மை விளக்கம் என்ற நூல் ஆடும் கூத்தனாக இறைவன் கொண்ட திருமேனி திருவைந் தெழுத்தால் ஆனது என்றும், உயிர்களின் பிறவித் தொடர் அறும்படி ஐந்தெழுத்து மந்திரத்தால் ஆடுகிறான் என்றும் விளக்குகிறது. அம்பலத்தானின் திருவடி 'ந'காரம், திருவயிறு 'ம'காரம், திருத்தோள் 'சி'காரம், திருமுகம் 'வ'காரம், திருமுடி 'ய'காரம். இவ்வாறு திருவைந்தெழுத்தால் அமைந்த மந்திரத் திருமேனி அவனுடையது. திருவடியிலிருந்து திருமுடிவரை (பாதாதிகேசமாக) 'நமசிவாய' போல் அமைந்துள்ளது என்று உண்மை விளக்கம் நூல் கூறுகிறது.

திருமுடியிலிருந்து திருவடிவரை (கேசாதிபாதமாகப்) பார்த்தால் கூத்தப்பிரானின் அவயவ அமைப்பு 'சிவாயநம' போல் அமைந்தள்ளது என்றும் உண்மை விளக்கம் கூறுகிறது. உடுக்கேந்திய திருக்கரம் 'சி'காரம், தூக்கிய திருவடியைக் காட்டும் இடது திருக்கரம் 'வ'காரம், அபயகரமான வலது திருக்கரம் 'ய'காரம், தீ ஏந்திய திருக்கரம் 'ந'காரம், முயலகனை அழுத்தும் வலது திருக்கால் 'ம'காரம். இவ்வாறு அமைந்துள்ளது.

**திருவைந்தெழுத்து மந்திரம் வேறெதனை உணர்த்துகிறது?**

இறைவனின் ஐந்தொழிலையும் உணர்த்துகிறது. சி - படைத்தல், ய - காத்தல், ந - அழித்தல், ம - மறைத்தல், வ அருளல். இதனால் இப்பதங்கள் கூத்தப் பெருமான் ஐந்தொழில் புரியும் அவையவங்களையும் குறிப்பதாகின்றன. அவனின் திருவாசி ஓம் என்ற வடிவைக் கொண்டது.

ஆடும் கூத்தனின் திருநடனம் இரு நிலைகளில் நிகழ்கிறது. ஒரு நிலையில் ஆன்மாக்கள் உலகியலில் திளைத்து வளர்ச்சி பெறுவதற்காக நிகழ்கிறது. இது அவனின் ஊன நடனம் எனப்படும். இன்னொரு நிலையில் இறை ஞானம் பெற்று முத்தி அடைவதற்காக நிகழ்கிறது. இது அவனின் ஞான நடனம் எனப்படும். ஆன்மா இரண்டிற்கும் நடுவில் நின்று உலகியல் அனுபவத்தையும் சிவானந்தத்தையும் பெறவேண்டும். திருவருட் பயன் "ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம் ஞான நடனம் தான்நடுவே நாடு' என்று கூறி உணர்த்துகிறது. திருவைந்தெழுத்திலுள்ள 'சிவ' என்ற பதம் ஞான நடனத்தையும் 'நம' என்ற பதம் ஊன நடனத்தையும் குறிக்கின்றன. 'ய' என்ற உயிரைக் குறிக்கும் பதம் நடு நின்று இரண்டையும் அனுபவிக்கிறது.

**மந்திரங்களில் உயர்ந்த மந்திரம் திருவைந் தெழுத்து என்பதற்கு ஆதாரம் என்ன?**

நூல்களும், அருளாளரின் சொல்லும் செயலும் இதற்கு ஆதாரமாக உள்ளன. இறைவனே திருவைந்தெழுத்து வடிவமாக நிற்கிறான் என்று உண்மை விளக்கம் போன்ற நூல்கள் கூறுகின்றன. திருமந்திரம் இம் மந்திரம் குறித்து விரிவாகக் கூறுகிறது. சம்பந்தர் அப்பர் போன்ற அருளாளர் திருவைந்தெழுத்து மந்திரத்தின் துணையால் அற்புதங்கள் செய்துள்ளனர். அந்தணர்கள் காயத்திரி மந்திரத்துக்கு உயர் இடம் அளிப்பது பொதுவாகக் காணக்கூடியது. அவர்களுக்கு இறுதியில் துணை நிற்பது திருவைந்தெழுத்து மந்திம் என்று சம்பந்தப் பெருமான் கூறுகிறார். "செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" என்பது அவரின் திருவாக்கு.

## ஞானச் செயல்

**ஞானச் செயல் என்று இங்கு கூறப்படுவது எது?**

பாசத்தினால் கட்டுண்ட உயிரின் அறிவு விளங்கி, பாசப் பொருள்களை அறிந்து, தான் பாசத்திலிருந்து வேறானது என உயிர் தெளிந்து, பரம்பொருளைச் சார்ந்திருப்பதே தனது இயல்பு என்பதை உணர்ந்து வீடு பேறு அடையும். இச்செயல்கள் யாவும் அறிவின் செயல்களே உடம்பின் செயல்களல்ல. பாசகட்டு அகன்று சிவத்தை அடையும் வரையுள்ள இச்செயல்கள் ஞானச் செயல் என்று இங்கே குறிக்கப்படுகின்றன.

**மேற்கூறப்பட்ட செயல்களில் ஞானம் எத்தனை வகையாக விளங்குகிறது?**

மேற்கூறப்பட்டவைகள் ஆன்மாவின் வளர்ச்சியில் காணப்படும் சில படி நிலைகள். ஆன்ம வளர்ச்சியில் விளங்கும் அதன் ஞானத்தை மூன்று வகையாகப் பிரிப்பதுண்டு. அவை பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் என்பன.

**இவற்றை விளக்குக.**

உலகியலில் ஆன்மா பெறும் அறிவு உடம்பின் கருவிகள் மூலம் வருவது் பாசப் பொருட்களின் தொடர்புடையது. பாசத்தின் வழியில் உயிர் பெறும் அறிவு பாச ஞானம் எனப்படும். பாச ஞானத்தினால் பாசத்தைக் கடந்த மெய்ப்பொருளை அறியமுடியாது.

உயிரின் பாசபந்தம் நீங்கி, உடம்பு முதலிய தத்து வங்களாலான பாசக்கருவிகள் தானல்ல, தான் வேறு அவை வேறு என்று காணும் அறிவு பசு ஞானம் எனப்படும். இதனாலும் பதியாகிய இறைவனை அறியமுடியாது.

பாச ஞானமும் பசு ஞானமும் கடந்த திருவருள் ஞானம் ஒன்று உண்டு. அது பதி ஞானம் என்று கூறப்படுகிறது. திருவாசகத்தில் காணும் "அவனருளாலே அவன் தாள் வணங்கி", என்ற தொடர் குறிப்பது இப்பதி ஞானத்தையே.

உயிர் கருவிகள் மூலம் அறிவு பெறுகிறது என்று எண்ணும் நிலை பாச ஞானம். தனக்குள்ளிருந்து அறிவிக்கும் சிவனை அறியாமல் தானே தன் முயற்சியால் அறிகிறேன் என்று எண்ணும் நிலை பசு ஞானம். இறைவனாலே தான் அறிகிறேன் என்று எண்ணும் நிலை பதி ஞானம்.

**மேற்சொன்ன மூவகை ஞானங்களில் ஒன்றினால் மட்டும் இறைவனைக் காண முடியாதா?**

பாசஞானம் கண் முதலிய ஞானேந்திரியங்கள் மூலமும், மனம் முதலிய அந்தக்கரணங்களின் மூலமும், அவற்றின் செயல் தொடர்பான மற்றைய தத்துவங்களின் துணையாலும் வருவது. இந்த ஞானத்தால் தத்துவங்களைக் கடந்த பரம்பொருளைக் காணமுடியாது. அந்தக் கரணங்கள் முதலியன செயலற்றுக் கல் (பாடாணம்) போல் இருப்பதே முத்தி நிலை என்று பாடாண வாதிகள், யோக மதத்தினர் என்னும் சமய வகையினர் கூறுவர். அவ்வாறாயின் இவைகள் செயலற்றுக் கிடக்கும் மரணமும் முத்தியென்று கருதப்பட நேரிடும். கருவி கரணங்கள் செயற்படாது மயங்கிக் கிடக்கும் நிலையும் முத்தி என்று கருத வேண்டிவரும்.

என்னால் அறியமுடிந்தது என்ற பசு ஞானத்தில், நான், எனது என்ற ஆணவக் கலப்பு உள்ளது. நானே பசு ஞானத்தால் இறைவன் என்று எண்ணுவதும் நின்மலனாகிய இறைவனை மலத் விழைவது. நின்மலனாகிய தொடர்புடைய பசுஞானத்தினால் அறியமுடியாது. 'அகம் பிரமாஸ்மி' (நான் பிரமம் ஆகிறேன்) என்று நம்பும் ஏகான்மவாதிகள் போன்றோராலும் முத்தியடைய முடியாது. ஊகத்தின் அடிப்படையில் இவர்கள் கொள்கைகள் எழுந்தவை என்றும், அவர்கள் பெறும் ஞானம் பாசஞானம், பசுஞானம் என்பவை என்றும் கருதப்படும்.

**'அகம் பிரமாஸ்மி' போன்ற மகா வேத வாக்கியங்கள் குறித்த சைவ சித்தாந்த விளக்கம் என்ன?**

அகம் பிரமாஸ்மி (நான் பிரமமாகிறேன்), தத்வமஸி (நீ அது ஆகிறாய்) என்பன வேத மகா வாக்கியங்கள். 'நான் பிரம்மமாகிறேன்' என்றால் நானும் இறுதி நிலையில் பிரமம் (கடவுள்) தான் என்பது பிறமதத்தவரின் விளக்கம். நான் பிரமமாந் தன்மையை அடைகிறேன் ஆனால் நான் வேறு பிரம்மம் வேறு, என்பது சைவசித்தாந்திகள் தரும் 'தத்வமஸ ி' விளக்கம். இத்தகைய விளக்கங்கள். என்பதற்கும் தரப்படுகின்றன. எந்த நிலையிலும் உயிர் வேறு, இறை வேறு என்பது சித்தாந்தச் கொள்கை. நான் பிரமம் என்ற ஞானம் பசுஞானம்.

சாதனையில் ஈடுபடும் ஆனால், ஆன்மீக மாணாக்கன் தன்னை இறைவனாகப் பாவனை செய்து பயிற்சி பெறுவது தேவையாகிறது. குருவும் இத்தகைய பாவனையைக் கொண்டிருப்பர். சிவோஹம்பாவனை என்பது சிவம் உள்ளத்தில் இருப்பதாக (சிவு, அகமு, பாவனை) பாவனை செய்தல். இதனால் மாணவன், ஆசிரியர் இருவரின் உள்ளத்திலும் சிவசிந்தனை நிலைத்திருக்கும் சிவத்தோடு ஒன்றியிருக்கும் நிலை பிறக்கும் பயிற்சி எளிதாகும். அகம் பிரமாஸ்மி போன்ற வேத மகா வாக்கியங்களும் இந்த நோக்கில் குருவால் மாணாக்கருக்கு உபதேசிக்கப் பட்டவை என்பர்.

**தசகாரியம் என்பதில் வரும் அனுபவ நிலைகள் யாவை?**

தசகாரியம் என்பதில் வரும் பத்துப் படி நிலைகள் வருமாறு:

1. தத்துவரூபம், 2. தத்துவதரிசனம், 3. தத்துவசுத்தி, 4. ஆன்ம ரூபம், 5. ஆன்மதரிசனம், 6. ஆன்மாசுத்தி, 7. சிவரூபம், 8. சிவ தரிசனம், 9. சிவயோகம், 10. சிவபோகம்.

மேற்கூறப்பட்ட பத்து நிலைகளும் ஆன்மா ஞான விளக்கம் பெறும் முறைகளை

உணர்த்துவன. இந்நிலைகளில் தத்துவம், ஆன்மா, சிவம் ஆகியவை தொடர்புற்று நிற்பதைக் காணலாம். இவை பாசம், பசு, பதி ஆகிய முப்பொருள்கள் என்பது சிந்தனைக்குரியது.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க.கணேசலிங்கம்)**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்



**“திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்”**

## திருக்கயிலையில் மூழ்கி திருவையாற்றில் வெளிப்படல்

திருக்கயிலையில் வீற்றிருந்தருளும் பெருமானார் திருக்கோலத்தைக் கண்டு மகிழ விரும்பி, வடதிசை நோக்கிப் புறப்பட்ட அப்பர் பெருமான், எம்பெருமான் வீற்றிருக்கின்ற திருப்பருப்பதத்தைச் சேர்ந்து வணங்கி, வளம் மிக்க தமிழ் மாலையைப் பாடிச் சென்று, காசியை வணங்கிக்கொண்டு, அதற்கு அப்பால் இருக்கின்ற கற்சுரத்திலே சாகமூலபலங்கள் புசித்தலையும் ஒழிந்து, திருக்கயிலைக் காட்சி காணல் செய்ய வேண்டுமென்னும் பேராசையால் இராப்பகல் விடாது நடந்தார்.

ஒரு நிலையில் உடல் சிந்தையொழித்துத் திருவருளை வழுத்தியவாறு பயணிக்கின்றார். பாதங்கள் கணுக்கால் வரையில் தேய்கின்றது, கரங்களின் உதவி கொண்டு முன்னேறிச் செல்கின்றார். மணிக்கட்டு வரையில் தசைகள் தேய்கின்றன. எனினும் அன்பு குன்றாதவராய் மார்பினால் தேய்த்துச் செல்கின்றார். மார்பின் தசைகளும் அழிந்து பட்டு எலும்புகளும் முறிகின்றன. திருவருளை நினைத்தவாறே புரண்டு செல்லத் துவங்குகின்றார். அதுவும் ஒரு நிலையில் இயலாது போக, அந்நிலையிலேயே அசைவற்று இருக்கின்றார்.

கயிலை முதல்வர் ‘சுவாமிகளைக் கொண்டு மேலும் சில தேவாரப் பனுவல்களைப் பாடுவிக்கத் திருவுள்ளம் கொண்டிருந்த காரணத்தால், அடிகளை இதற்கு மேல் கயிலையை நெருங்க அருளாதவராய்’, குளம் ஒன்றினைத் தோற்றுவித்து, முனிவர் ஒருவரின் உருவில் அங்கு எழுந்தருளித் தோன்றுகின்றார்.

இந்நிகழ்வை சேக்கிழார் பெருமான் பின்வருமாறு தன்னுடைய திருப்பாடல்களில் எடுத்தியம்புகிறார், *(பெரிய புராணம் - திருநாவுக்கரசர் புராணம் - திருப்பாடல் 361)*

**“அன்ன தன்மையர் கயிலையை**<br>
**அணைவதற் கருளார்**<br>
**மன்னு தீந்தமிழ் புவியின்மேற்**<br>
**பின்னையும் வழுத்த**<br>
**நன்னெ டும்புனல் தடமும்ஒன்**<br>
**றுடன்கொடு நடந்தார்**<br>
**பன்ன கம்புனை பரமரோர்**<br>
**முனிவராம் படியால்.”**

முனிவராகத் தோன்றிய முதல்வர் **“திருக்கயிலையை அடைவது அரிது”** என்று எடுத்துரைத்தும், அப்பர் அடிகள் உள உறுதியோடு “திருக்கயிலை நாதரைக் காணாமல் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்” என்று உறுதிபடப் புகல்கின்றார். இறைவர் திருவுருவம் மறைத்து அசரீரியாய் **“ஓங்கு நாவுக்கரசனே எழுக”** என்றருள் புரிய, தாண்டக வேந்தர் ஒளிமிகு தேகநலம் பெற்றெழுகின்றார்.

இறைவன் அருட்குரல் கேட்ட அப்பர் பெருமான் அகம் குழைந்துருகி, **“அண்ணலே, விண்மிசை மறைந்து அருள் புரிகின்ற முதல்வா, உன் கயிலைக் கோலத்தினை காட்டியருள் புரிவாய் ஐயனே”** என்று பணிய, இறைவரும் **“இங்குள்ள பொய்கையில் மூழ்கித் திருவையாறில் நமது கயிலைக் கோலம் காண்பாய்”** என்றருள் புரிகின்றார். நாயனாரும் கண்ணருவி பாய, உச்சி கூப்பிய கையினராய் **“வேற்றாகி விண்ணாகி”** எனும் போற்றித் திருத்தாண்டகத்தால் கயிலைப் பரம்பொருளைத் தொழுதேத்திப் பின்னர் திருஐந்தெழுத்தை உள்ளத்து இருத்தியவாறே அப்பொய்கையுள் மூழ்குகின்றார்.

முக்கண் முதல்வரின் ஆணையை ஏற்று, இறைவன் கயிலையில் தோற்றுவித்த குளத்தில் மூழ்கி, மறுகணமே திருவையாற்றுத் திருக்குளத்தினின்றும் வெளிப்பட்டு வந்த நம் அப்பர் சுவாமிகள், **“கயிலை நாயகரின் திருவருளும் இதுவோ?”** என்று விழிநீர் பெருக்கி நெகிழ்கின்றார்.

‘இறைவர் தன் அருளினால் கயிலையில் ஒரு குளத்தைத் தோற்றுவிக்க, அப்பரோ இங்கு அன்பினால் பெருகும் கண்ணீரினால் மற்றொரு குளத்தைத் தோற்றுவிக்கின்றார்’ என்றிதனைச் சேக்கிழார் பெருமான் பின்வரும் திருப்பாடலினூடாக நயம்பட விவரித்துப் போற்றுகின்றார். *(பெரிய புராணம் - திருநாவுக்கரசர் புராணம் - திருப்பாடல் 372)*

**“வம்பு லாமலர் வாவியின்**<br>
**கரையில்வந் தேறி**<br>
**உம்பர் நாயகர் திருவருட்**<br>
**பெருமையை உணர்வார்**<br>
**எம்பி ரான்தருங் கருணைகொல்**<br>
**இதுஎன இருகண்**<br>
**பம்பு தாரைநீர் வாவியிற்**<br>
**படிந்தெழும் படியார்.”**




**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (348 - 372)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு ஞானப்பூங்கோதை உடனுறை குடுமித் தேவர் (திருக்காளத்தியப்பர்) – திருக்காளத்தி

### தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 251ஆவது திருக்கோயில் திருக்காளத்தி



"வாய்கலசமாக வழிபாடு செய்யும் வேடன் மலராகு நயனம், காய்கணையினாலிடந்து ஈசனடி கூடு காளத்தி மலையே"

அன்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கும் கண்ணப்ப நாயனார் வழிபட்டு இறைவனுடைய வலப் பக்கத்தில் நிற்கும் பெருஞ்சிறப்பு வாய்ந்த காற்றுத் திருத்தலமே, அருள்மிகு ஞானப்பூங்கோதை உடனுறை குடுமித் தேவர் (திருக்களத்தியப்பர்) திருக்கோயில். (வடமொழியில் 'ஸ்ரீ காளஹஸ்தி' என்று அறியப்படும்.)

**அமைவிடம்:** காளகத்தி, ஆந்திரப் பிரதேசம்.

வட சென்னை இருப்புப் பாதையில் காளத்தி என்னும் தொடர்வண்டி நிலையத்திற்கு வடகிழக்கே 5. கி.மீ.தூரத்தில் இருக்கிறது.

**இறைவர் திருப்பெயர்:** திருக்காளத்திநாதர், குடுமித் தேவர் ( நாணன் என்னும் வேடனால், கண்ணப்பரிடம் கூறப் பெற்றபெயர்)
**இறைவியார் திருப்பெயர்:** ஞானப்பிரசுன்னாம்பிகை, ஞானப் பூங்கோதை, ஞானாம்பிகை, ஞானசுந்தரி.
**கோயில் மரம்:** கல்லால மரம் (விழுது இறங்காத ஆல மரமே கல் ஆலமரமாகும்)
**தீர்த்தம்:** பொன்முகலி ஆறு ( இது இவ்வூரில் வடக்கு நோக்கிச் செல்லும் சிறப்புடையது), பிரம தீர்த்தம், சரசுவதி தீர்த்தம், சூரிய தீர்த்தம் முதலியன.
**வழிபட்டோர்:** திருமால், பிரமதேவர், திருமகள், கலைமகள், திக்குப் பாலகர் முதலான தேவர்களும், அகத்தியர், வசிட்டர் முதலான முனிவர்களும், முசுகுந்தச் சக்கரவர்த்தி, நக்கீரர் முதலான பெரியோர்களும், வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.
**பாமாலை:** சம்பந்தர், அப்பர், சுந்தரர் , நக்கீரதேவர்.

#### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்
#### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே.
(3-36-1)

#### திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்

விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லால்
மற்றூணொன் றில்லாத மாசது ரன்காண்
மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
பொய்யாது பொழிலேழுந் தாங்கி நின்ற
கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண் அவனென் கண்ணு ளானே.
(6-8-1)

#### சுந்தரர் அருளிய திருப்பதிகம்

செண்டா டும்விடையாய் சிவ
னேயென் செழுஞ்சுடரே
வண்டா ருங்குழலா ளுமை
பாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்குங் கண
நாதனெங் காளத்தியாய்
அண்டா வுன்னையல்லால் அறிந்
தேத்த மாட்டேனே. (7-26-1)

#### திருத்தலச் சிறப்பு

இது சீகாளத்தி எனவும் கூறப்பெறும். சிலந்தி, பாம்பு, யானை இவை மூன்றும் வழிபட்டு வீடுபேறு அடைந்த தலம் ஆதல் பற்றி இப்பெயர் எய்திற்று என்பர். (சீ = சிலந்தி, காளம் = பாம்பு, அத்தி = யானை) ஐம்பூத தலங்களும் ஐம்பூதத்தலங்கள் ஆவன:- திருவாரூர் - நிலம் (பிருதிவி). திருவானைக்கா - நீர் (அப்பு). திருவண்ணாமலை - தீ (தேயு). திருக்காளத்தி - காற்று (வாயு). சிதம்பரம் - வெளி (ஆகாயம்)

கண்ணப்பரது திருத்தொண்டைப்பற்றி **"வாய்கலசமாக வழிபாடு செய்யும் வேடன் மலராகு நயனம், காய்கணையினாலிடந்து ஈசனடி கூடு காளத்தி மலையே"** எனத் திருஞானசம்பந்தப் பெருமானும்,

"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ"

என வாதவூரடிகளும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இத்தலத்திற்கு வீரை நகர் ஆனந்தக் கூத்தர் பாடிய திருக்காளத்திப் புராணம் ஒன்றும், கருணைப் பிரகாசர், சிவப்பிரகாசர், வேலப்ப தேசிகர் இவர்கள் மூவரும் சேர்ந்து பாடிய தலபுராணம் ஒன்றும், சேறைக்கவிராசர் பாடிய உலா ஒன்றும், நக்கீரதேவர் பாடிய கைலைபாதி காளத்திபாதி அந்தாதி ஒன்றும் ஆக நான்கு நூல்கள் இருக்கின்றன. இவைகளன்றி ஞானசம்பந்தர் பதிகங்கள் இரண்டு, திருநாவுக்கரசு நாயனார் பதிகம் ஒன்று, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக நான்கு பதிகங்கள் இருக்கின்றன.

இவ்வூர்ப் பாடல்பெற்ற கோயிலில் சோழமன்னர்களில் முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழதேவன், முதலாம் இராசாதிராச தேவன், இராசகேசரி வர்மனாகிய வீரராசேந்திரன், முதற்குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசாதிராச தேவன்,



திரிபுவனச் சக்கரவர்த்தி வீரராசேந்திர சோழ தேவன், இவர்கள் காலங்களிலும், விசயநகர வேந்தர்களில், வீரப்பிரதாப கரிகரராயர், வீரப்பிரதாப தேவராயர், வீரப்பிரதாப வீரகிருணட்ன் தேவராயர், வீரசதாசிவ மகாராயர் முதலானோர் காலங்களிலும், காகதீய வம்சத்துக் கணபதி காலங்களிலும், மற்றும், விசயகண்ட கோபால தேவன், ஆளும் திருக்காளத்தித் தேவனாகிய கண்ட கோபாலன் இவர்கள் காலங்களிலும் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் திருக்காளத்தி உடைய நாயனார், திருக்காளத்திச்சிவனார், ஆளுடையார் தென்கயிலாயமுடையார் என்னும் பெயர்களாலும், விடங்கர் சோதிவிடங்கர் என்னும் பெயராலும் கூறப்பெற்றுள்ளனர்.

#### திருத்தல வரலாறு

முன்பொரு காலம் ஆதிசேசனுக்கும் காற்றுக் கடவுளுக்கும் தம்மில் யார் பெரியவர் என்ற போட்டியில் ஆதிசேசன் கயிலை மலையைச் சுற்றி மூடிக்கொள்ள, காற்றுக் கடவுள் தன்னுடைய பலத்தால் மலைச்சிகரங்களை பெயர்த்தெறிய முயற்சித்தார். ஆயினும் இயலவில்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆதிசேசன் சற்று அசைய அந்த நேரத்தில் காற்றுக் கடவுள் தன் பலத்தால் சிகரங்களை பெயர்த்து கொண்டு வந்தவற்றுள் ஒன்றுதான் திருக்காளத்தி சிகரம். அருள்மிகு (ஸ்ரீ) - காளம் - அத்தி = சிலந்தி - பாம்பு - யானை ஆகிய மூன்றும் வழிபட்டுப் பேறு பெற்ற சிறப்புடைய தலம்.

இங்கு வந்த அகத்தியர் விநாயகரை வழிபடாமற் போகவே, பொன்முகலி ஆறு நீரின்றி வற்றியது் அகத்தியர் தம் தவறுணர்ந்து பாதாளத்தில் - ஆழத்தில் விநாயகரை திருநிலைப்படுத்தி செய்து வழிபட்டு அருள் பெற்றார் என்பது தல வரலாற்றுச் செய்தி. (பாதாள விநாயகர் சந்நிதி உள்ளது.)

அருச்சுனன், தன் தீர்த்த யாத்திரையில் இங்கு வந்து இறைவனை வழிபட்டும், பரத்வாச மாமுனிவாரைக் கண்டு வணங்கிச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது.'திருமஞ்சனக் கோபுரம்' எனப்படும் கோபுரத்திலிருந்து பார்த்தால், நேரே பொன்முகலி ஆறு தெரியும் ஆற்றுக்குச் செல்வதற்கு படிக்கட்டுகள் உள்ளன. இவ்வழியேதான் திண்ணனார் (கண்ணப்பர்) பொன்முகலி நீரைக் கொண்டுவந்து சுவாமிக்கு திருமஞ்சனம் செய்தார் என்று சொல்லப்படுகிறது.

நக்கீரர் இம்மலையில் வந்து தங்கி நதியில் நீராடி இறைவனைத் தொழுது வெப்பு நோயிலிருந்து முழுமையாக நீக்கம் பெற்றாராம். சண்டேசுவரர் சந்நிதி - மூலவர் பாணம் மட்டும் ஒன்று மிக உயரமாக உள்ளது் முகலாயர் படையெடுப்பின் போது கோயிலில் உள்ள மூலத் திருமுன்களை உடைத்துச் செல்வங்களை பறித்து வந்தனர் அவ்வாறு இங்கு நிகழாதபடி தடுக்கவே மூலவருக்கு முன்னால் இதை நிலைப்படுத்தல் செய்து வைத்து அவ்விடத்தை மூடிவிட, வந்தவர்கள் இதையே உண்மையான மூலவர் என்றெண்ணி, உடைத்துப்பார்த்து, ஒன்றும் கிடைக்காமையால் திரும்பிவிட, பின்பு சிலகாலம் கழித்து மூலவர் சந்நிதி திறக்கப்பட்டதாம். அப்போது முன் இடத்தில் திருநிலைப்படுத்தல் செய்யப்பட்டு, படையெடுப்பாளர்களால் உடைக்கப்பட்ட பாணமே இது என்று சொல்லப்படுகிறது.

#### திருக்கோயில் அமைப்பு

இந்தியாவில் காற்றுக் கடவுளுக்கு கட்டப்பட்ட ஒரே கோயிலான காளத்தி கோயில் சோழர்களின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவரும் தஞ்சை பெரிய கோயிலை கட்டிய இராசராச சோழனின் மகனும், தென்னிந்தியாவின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவருமான இராசேந்திர சோழன் கட்டிய கோயிலாகும்.

கருவறையை அடுத்த மண்டபத்தில் கண்ணப்பர் சிலை உள்ளது. மூலவரின் எதிரில் வெள்ளைக்கல் நந்தியும், பித்தளை நந்தியுமாக இரு நந்திகள் உள்ளன. கருவறை அகழி போன்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. சுற்றில் விநாகயர், ஆலமர் கடவுள் (தட்சிணாமூர்த்தி), பெருஞ்சோதியான் (இலிங்கோத்பவர்), நான்முகன், மலைமகள் (துர்க்கை) ஆகிய திருமுன்கள் உள்ளன. கோயிலின் நுழைவுவாயிலின் எதிரில் கவசமிட்ட கொடிமரம் ஒன்றும், 60 அடி உயரமுடைய, ஒரே கல்லால் ஆன கொடிமரம் ஒன்றும் உள்ளது. இதன் அருகே பலிபீடமும், நந்தியும் உள்ளன. அகண்ட வில்வ மரம், கல்லால மரம் ஆகிய இரண்டும் இக்கோயிலின் தல மரங்கள். இந்த ஊருக்கு அருகில் பொன்முகரிஆறு ஓடுகிறது.

#### கண்ணப்பர் கோயில்:

இக்கோயில் மண்டபமும் மண்டபத்தைச் சுற்றிய தாழ் வாரமும் ஆடவல்லான் கங்கை கொண்டானாகிய இருங்கோளன் தாயாராகிய புத்தங்கையாரால் கட்டப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தகவல் - thevaaram.org வலைத்தளம்

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 1000ம் ஆண்டுகளுக்கு முன் சோழர்காலத்தில் சிறப்புற்று விளங்கிய, கந்தளாய்ச் சிவன் கோயில்



சைவப்பூமியின் மகுடமாய் விளங்கும் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமாய் விளங்குவது கந்தளாய் சிவன் கோயில் ஆகும். கல்வெட்டுச் சாசனங்களில் **“தென்கைலாசம்”** என்று பொதுப்பெயராலும், **“இராசராச ஈச்சரம்”**, **“விசயராச ஈச்சரம்”** போன்ற சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்த சிவன் கோயிலாகவும் விளங்கியுள்ளது.

### திருத்தல ஊரின் சிறப்புக்கள்

திருக்கோயில் இருக்கும் இடம் அல்லது ஊர் தலம் எனப்படும். பண்டைத் தமிழர்கள் இயற்கை வனப்பும் அமைதியும், தூய்மையும் நிறைந்த சூழல்களிலேயே தெய்வவழிபாட்டுத் தலங்களை நிறுவி வழிபாடுகளை நிகழ்த்தி வந்திருப்பது காலாகாலமாக நிகழ்ந்து வரும் மரபாகும். அந்தவகையில் நோக்கும் போது கந்தளாய் ஊரும் சிவப்பரம்பொருளின் இடமாக புனிதத் தன்மை பெற்றுள்ளது. மற்றும் குளக்கோட்ட மன்னனின் திருப்பணியாய் அமைந்த குளமும் இவ் ஊரிற்கு வரலாற்றுப் பெருமையை ஈட்டிக் கொடுத்துள்ளது. கந்தளாய்க் குளத்தோடு ஒட்டிய கோணமாமலையாரின் தானபூமியான வயல்வெளிகளும். சிறுகாடுகளும் கொண்ட ஊரில் தொன்மைக் காலத்தில் தமிழர் பண்டைய காலந்தொட்டு வாழ்ந்து வந்துள்ளனர். தற்போது சிங்களவர், முஸ்லீம்கள் குடியேறிய பிரதேசமாக விளங்குகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊரின் பெயராகவும், பெருங்குளத்தின் பெயராகவும் கந்தளாய் கிராமம் சிறப்புப் பெற்றுள்ளது. பாளி மொழி இலக்கியங்களில் **“கங்க-தடாக”** எனவும். சிங்கள மொழிச் சாசனங்களில் **“கல்க-தளா”** எனவும் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணாசலபுராணம் ஆகிய நூல்களில் கந்தளாய்க் குளம் தொடர்பாக குளக்கோட்ட மகாராசன் மேற்கொண்ட பணிகள் பற்றி வர்ணிக்கப்படுவதிலிருந்தும், இரண்டாம் கஜபாகு மன்னன் இவ்வூரிற்குப் புரிந்த திருப்பணிகள் பற்றிக் கூறும் சாசனங்களிலிருந்தும், கந்தளாயில் காணப்படும் சோழ இலங்கேச்சரன் காலத்துச் சாசனங்களில் வரும் வரலாற்றுத் தகவல்களிலிருந்தும் இத்தலவூரின் வரலாற்றுச் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

### சிவன் கோயில் - இராசராச ஈச்சரம்

தமிழகம் உட்பட சுவர்ணபூமி எங்குமாக சோழப்பெருமன்னர்களின் ஆதிக்கம் செல்வாக்குப் பெற்ற காலகட்டத்தில் ஈழத்தைச் சோழர்கள் தங்கள் ஆதிக்கத்தினுள் கொண்டு வந்த போது, பொலநறுவை, திருகோணமலை, கந்தளாய், பதவியா போன்ற இடங்களில் சோழர்கள் நிர்மாணித்த சைவக்கோயில்களும், வழிபாடுகளும், சமயப் பண்பாடுகளும் விருத்திநிலை கண்டிருந்தன. அந்த வகையில் கந்தளாய் சிவன் கோயிலும் அக்கோயிலுடன் தொடர்புபட்ட சைவப் பண்பாட்டு அபிவிருத்திகள் சோழப்பெருமன்னர் காலத்தில் பெருவளர்ச்சி கண்டிருந்தது.

பொலன்நறுவைக் காலத்தில் சோழர்கள் பிராமணக்குடியிருப்புக்களை பல இடங்களில் ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். அவை பிரம்ம தேயம் என்ற பெயரால் அழைக்கப்பட்டிருந்தது. அத்தகைய பிரம்ம தேயங்களில் கந்தளாய் பிரம்மதேயம் முதன்மை பெற்று விளங்கியது. சோழரின் ஆட்சியில் கந்தளாய் இராசேந்திர சோழ வளநாடு என்னும் பிரிவில் அடங்கியிருந்தது. ஆதலால் கந்தளாய் பிரம்ம தேயம் இராசராச சதுர்வேதி மங்கலமாகப் பெயர் பெற்றது. இதைக் கந்தளாயில் கண்டறியப் பட்ட பழைய சாசனமொன்றில் இத்தகவல் “இராசேந்திர சோழ வள நாடான வித்தியாதர வளநாட்டுப் பிரமதேயம் இராசராச சதுர்வேதி மங்கலத்தைக் குறிப்பிடுகின்றது” என்று கூறப்பட்டுள்ளது. இச் சாசனம் 10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. அச் சாசனத்தின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

> **“ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ஸ்ரீ சங்கவர்மரான உடையார் ஸ்ரீசேழ இலங்கேஸ்வர தேவற்கி யாண்ட்டு பத்தாவது ராஜேந்த்ர சோழ வள நாட்டு ராஜவிச்சாதிர வளநாட்டு ப்ரகமதேஸம் ஸ்ரீ ராஜராஜச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி பெருமக்க ளோம் இய்யாட்டைக் கும்ப நாயற்று பூர்வ ப கூத்துத் வாதஸியும் செவ்வாய்க் கிழமையும் பெற்ற ஆயிலெயத்து நான்றிரவு நம்மூர் தண்டுகின்ற முத்தங்கை கோயில் மானி......”**

(இச்சாசனக் குறிப்புகள் வடமொழி சார்ந்திருப் பினும் சான்றுக் குறிப்பு என்பதால் எவ்வித மாற்றமுமின்றி பதிவிடப்படுகின்றது.)

இத்தகைய கற்றூண் சாசனத்தை முழுமையாக வாசித்தறிந்த பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் ‘இலங்கையில் இந்துசமயம்’ என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**“கந்தளாயிலுள்ள சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்கள் சோழ இலங்கேஸ்வர தேவனின் 10 ஆவது ஆண்டிலே, மாசி மாதத்துப் பூர்வபட்சத்துத் துவாதசியான செவ்வாய்க்கிழமையும் ஆயிலிய நட்சத்திரமுங் கூடிய தினத்து இரவிலே கூடியிருந்து ஊர்த் தண்டுவானாகிய மானிதொடர்**





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

**பாகவும், விக்கிரமசோழ வாய்க்காவின் இரண்டாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரத்திலுள்ள நீர்நிலம் 3 மா குறித்தும் ஏதோ முடிபுகளை மேற்கொண்டனர். கந்தளாயிலிருந்த சிவன் கோயில் மண்டபத்திலே அவர்கள் கூட்டமாகக் கூடினார்கள் என்றும், கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தைக் கோயிலிலிருந்த மண்டபமொன்றின் தூணிலே சிலாசாசனஞ் செய்தனமென்றும் அனுமானித்துக் கொள்ளலாம்”** (இந்நூல் குறிப்புகள் வடமொழி சார்ந்திருப்பினும் சான்றுக் குறிப்பு என்பதால் எவ்வித மாற்றமுமின்றி பதிவிடப் படுகின்றது.)

ஆனால் தற்போது உள்ள சிவன் கோயில் கந்தளாயில் உள்ள பேராறு பகுதியில் அமைந் துள்ளது. அது இன்று **“இராசேந்திர சோழீச்சரம்”** என்ற பெயரோடு அழைக்கப்பட்டு வருகின்றது.



ஆனால் கட்டடம் சோழர்கள் அமைத்தவாறு இல்லை. முற்றுமுழுதாக தற்காலத்து சீமெந்துக் கட்டடமாக காட்சியளிக்கின்றது. இக் கோயிலின் ஒரு புறத்தில் சில கற்றூண்களும், சிதைந்த உருவச் சிலைகளும் காணப்படுகின்றன. ஏறத்தாள ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழரின் ஆதரவோடு பொலிவுற்றுக் காணப்பட்ட இச் சிவன் கோயிலை ஒருசில இன சமய விரோதிகள் மண்ணோடு மண்ணாக அழிந்துவிட்டதனால், கோயிலின் முழுமையான பாகங்களை யாரும் அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கவில்லை.

இருப்பினும் சிவபிரானின் அருளாற்றலினால் ஆங்கும் ஈங்குமாக சில தொல்பொருட் சின்னங்களும், சிதைந்த படிமங்களும் கிடைத்துள்ளன. 1950 இற்கும் 1977 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இப்பிரதேசம் பல்வேறு இனத்தவர்களால் குடியேற்றத்திற்குட்பட்டபோது, சிவலிங்கங்கள், ஆவுடையார்கள், சிதலமடைந்த சிவன் அம்மன் திருவுருவங்கள், பின்னமடைந்த நந்தி, தூண்கள், ஆசனக்கற்கள், தேரோடிய பாதை, நாயன்மார் ஒருவரின் வெண்கலச்சிலை, மணி ஆகிய எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை சோழர் காலத்திற்குரியவை என்று ஆய்வாளர்கள் இனங்கண்டுள்ளனர்.

இத்தகைய திருக்கோயில் 1960 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு, 1975 ஆம் ஆண்டு நன்னீராட்டு விழாவும் செய்யப்பட்டது. அதன் பின் 2004 ஆம் ஆண்டு நன்னீராட்டு விழா செய்யப்பட்டு, அதன் நினைவாக ‘சோழர் கால சோழீச்சரம் கந்தளாய் சதுர்வேத மங்களபுர சிவன் கோயில் நன்னீராட்டு விழா மலரும்’ வெளியிடப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Kadavul Temple Kauai - America

Kadavul Temple is the central place of worship at Kauai Aatheenam, a sprawling monastery on Kauai Island. Built with Tamil architecture similar to the temples in South India and Sri Lanka, it's dedicated to Lord Siva. Every day before sunrise, the resident monks gather here for a special pusai to Siva. Throughout the day, they take turns keeping watch over the temple in three-hour shifts, filling the space with chanting, meditation, and spiritual practices. This continuous devotion, practiced since the temple's founding in 1973, creates a powerful atmosphere that, like the ancient South Indian temples, is said to have a transformative effect on visitors. Within the temple's principal sanctuary, devotees encounter the revered deity Siva manifested in two distinct forms. The first is Natarasar, the cosmic dancer, a representation of Siva's dynamic and transformative power. The second manifestation is a remarkable, naturally occurring crystal Sivalingam, weighing 700 pounds, and reaching a height of three feet. This temple was not built by a Tamil but rather Satguru Sivaya Subramuniyaswami (1927–2001).

Satguru Sivaya Subramuniyaswami (1927–2001) was such a being, a living example of awakening and wisdom, a leader recognized worldwide as one of Hinduism's foremost ministers. In the year 1947, at the youthful age of twenty, he embarked upon a voyage to India and Sri Lanka. Two years thence, he was led by Gnanaguru Yogar Swamikal (1872-1964), a venerated Sri Lankan Siddha yogi and devotee of Siva. Gnanaguru Yogar Swamikal himself was widely regarded as one of the most remarkable mystics of the 20th century. For over five decades Subramuniyaswami, also known as Gurudeva, taught Saivam to Saivites and seekers from all faiths. As shown the incredible work of Satguru Sivaya Subramuniyaswami in spreading Saivam globally to hundreds of new believers can be hugely accredited to Gnanaguru Yogar Swamikal.

Yogar Swamikal's heavy Tamil influence is visible in his immense dedication and devotion to Thevarams and his constant reciting of the songs. This influenced Sivaya Subramuniyaswami greatly and is evident in the Kadavul Temple which is built entirely around the principles of Saivam and Tamil and the recital of Tamil literature continues to this day. It is important that we acknowledge the greatness of this achievement as Saivam and Tamil continues to survive and grow around the world. Saivite practices such as pusai(s) are still ongoing at the temple and are conduced frequently. Gnanaguru Yogar Swamikal has played an important role in the growth of Saivam and Tamil around the world.

Kadavul Temple in Kauai Island in the USA is a testament to the power of Tamil and Saivam and serves as a symbol of wonder. This temple continues to promote and maintain Saiva practices including the promotion of Thirumuraikal and Saiva Siththantha Philosophy and should be recognized for its massive role in the devotion to Lord Siva.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva
P.Abiram
SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Nedumaran, The king of the Pandiya empire in the 7th century was converted into Jainism. His wife and Chief Minister,



however, stayed faithful to Sivan. They sent messengers to Sampanthar, to invite him to re-establish Saivism in the Pandiya Region.

Sampanthar started his travel to Madurai but Appar tried to stop him , by saying that the planets were not favourable to him right now. Sampanthar replied " the planets would always be good to the disciples"

Sampanthar sang his KOLARU PATHIGAM to explain his concept of fate and it goes as follows:

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனிபாம்பி ரண்டு முடனே**
**ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.**

**Veyuru tholi pangan, Vidamunda kandan, Miga nalla veenai thadavi,**
**Masaru thingal, kangai mudi mel aninthen, ulame puhuntha athanal,**
**Nayiru , thingal, chevvai , puthan , viyalan, velli, sani , pambu irandum udane,**
**Aasaru nalla nalla, avai nalla nalla, adiyar avarkku migave.**

In English this translates to, Friend of the lady with Bamboo like shoulders , God having a neck affected by swallowing poison, One who plays Veena faultlessly , One who wears the spotless moon and Ganga on his head, Entered inside my mind and immediately made Sun, moon, mars, mercury, Jupiter , Venus Saturn and the two snakes, Cut away desires and are good , they are good , and are very good to devotees of Siva.

Sampanthar reached Madurai. He went to the temple of Alavai Annal and prayed to Sivan. The Queen and the Chief Minister welcomed Sampanthar with devotion and arranged a resort for him to stay in.

**To be continued...**

# An Outline of Saivism - Siva the Absolute



Everything that we see undergoes change. It has an origin, existence and decay. The physical bodies, mental and psychological instruments, worldly things and the universe experience these changes. For any change to occur force or energy is required.

While experiencing these changes, man, at times, has realized a subtle power or entity which causes these changes but does not change by itself. This must be an intelligent and all powerful Being. It is called God.

Various religions call God by various names. Saiva religion refers to Him as SIVA or SIVAM.

### Perfect Being

The religion of Saivam derived its name from Sivam. Sivam means the auspicious One or the perfect Being. He is the ultimate of all virtues, excellence in love, compassion, wisdom, etc. He is the Reality Absolute.

The Tamil equivalent of God is Kadavul *(கடவுள்)*. This is made up of two syllables, Kada *(கட)* and Ul *(உள்)* meaning that which is outside and inside. Thus He permeates everything including space. He is all pervasive and omnipresent.

Irai is another Tamil name for God, suggesting that He is our lord or king. In the philosophical term, He is called Pathi meaning lord or head. Pasu is the name for a soul which has its limitations. God Siva is, therefore, called Pasupathi the lord of the souls. Brahmam and Parabrahmam are names of Siva in Sanskrit.

The Saiva Tamils who realized Siva as the perfect being, worshiped him as Siva of the Tamil land. At the same time they consider him as the God of all lands. Saint Manikkavasagar explains this in his Thiruvasagam lines as follows.

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி.

Praise to Siva of the Southern land
Praise to God of every land.

### Attributes

Our capabilities are impaired by the subtle entity called Anavam. It is the source of our ego and ignorance and associated with the soul as malam or impurity. Siva is free of such malam and is referred to as Nirmalan, Ninmalan or Nimalan.

We have various attributes or qualities (gunas) which make up our psyche. Siva has no such attributes and hence is called Nirgunan (one without gunas). However the religious texts describe Siva with eight attributes. These are qualities known to the human mind. This helps us to understand him and perceive him as a personal God. Also, it becomes easy for the mind to contemplate on him. (God is referred as him here for the flow which is not right)

Siva the absolute is formless. He is wisdom personified. His power or Sakthi is his Grace or Arul. He is called Param and his Sakthi is called Parai or ParaSakthi. Like the sun and its light, Siva and his Sakthi are inseparable. They are akin to the potential and kinetic state of one and the same thing.



Dr. K. Ganesalingam
Canberra - Australia

In his true form, Siva is Satchidananda State (Sat-Chit-Ananda). Sat means one in existence (truth). In Saiva/ philosophy Sat is changeless and does not undergo transformation. Chit is knowledge or wisdom. Ananda is bliss. Siva is an embodiment of Truth, perfect wisdom and bliss. He is beyond sense perception. Perception of a different kind is required to see him. This will come only through his grace which descends on us when we are spiritually mature. The knowledge required to see him is called Pathignanam. *(பதிஞானம்)*

### Act of Siva

Due to his grace or unlimited love, Siva helps the souls to evolve from their bonded state to freedom and to enjoy divine bliss. He causes creation, preservation and dissolution to be performed by Brahma, Vishnu and Rudra.

Creation involves physical bodies, mental and psychological faculties and worldly things. By preservation He helps the souls to gain experience and knowledge during a particular period in by dissolution those which were created transformed into Maya. Birth and death, according to Saiva philosophy, are only transformations from one state to another, from the fine to the gross (from maya to its products) and vice versa. To these three-fold activities, obscuration *(மறைத்தல்)* and conferment of grace *(அருளல்)* are added and described as five-fold activities. In this> preservation includes obscuration and dissolution includes conferment of his grace.

Siva, the absolute, in his state of performing the above functions, is called Pathi *(பதி)*. Here, we should remember that Siva is not one of the Trimurtis *(மும்முர்த்திகள்)* (Brahma, Vishnu and Rudra) who belong to Anubksa or group of spiritually evolved souls.

### Form and Formless

According to Saivism, Siva takes three types of bodies or forms. In his intrinsic state, he is formless. It is called Arupa *(அருவம்)* state. Out of his immense love or grace for the souls, he takes forms. Thus is the Rupa *(உருவம்)* state. In between these two states is the 'formless-form' called 'Aruparupa' *(அருவுருவம்)* form. In Saiva Siddhanta philosophy, in his formless state, he is called Sivam. In his 'formless-form' state Sathasivam. In his state with form He is called Maheswaran.

Out of these three forms, Siva takes nine manifestations for performing His activity. Sivagnanasiddhiyar refer to them collectively as navam tharu pethm. They are Sivam, Sakthi, Natham and Vindu of arupa form, Sadasivam of Aruparupa form and Maheswara, Rudra, Vishnu and Brahma of rupa form.

Sivalingam is symbolic of Sathasivam. In his Maheswara state Siva takes twenty five manifested forms called Sivamurthams. These forms are seen by the Rishi's in their inner vision and described in Saiva Agamas. Unlike human forms, they are formed by the attributes of Siva's Grace to help us in our contemplation, worship and meditation. In whatever form we worship God, it is Siva with his Sakthi who confers good to us.

# Kauai Adheenam USA - Kadavul Temple (Nadarasar Koyil)









Kadavul Hindu Temple is a traditional Sri Lankan style Siva temple. It is the spiritual nucleus of Kauai Aadheenam, a 382-acre monastery/temple complex also known as Kauai's Hindu Monastery. Kadavul is the Natarasar temple, established in 1973, where the monks worship and meditate together each morning. There is a sixteen-ton Nandi bull who worships Siva day and night from his pavilion out front.

# Kauai Adheenam USA Newly Built Iraivan Temple







Supreme God Siva is enshrined in the main sanctum in the form of Natarasar and a crystal Sivalingam. In front of Siva's sanctum is a 700-pound, 3-foot-tall, naturally formed crystal Sivalingam (among the largest known Padika Suyambu lingams in the world) was consecrated recently inside the monastery, has now become the primary image of worship in the hand-carved white granite Iraivan Temple.








# Satguru Sivaya Subramuniyaswamikal An ascetic disciple of Jaffna Siva Yogar Swamikal

Once in a while on this Earth there arises a soul who, by living his tradition rightly and wholly, perfects his path and becomes a light to the world. Satguru Sivaya Subramuniyaswami (1927–2001) was such a being, a living example of awakening and wisdom, a leader recognized worldwide as one of Hinduism's foremost ministers. In 1947, as a young man of 20, he journeyed to India and Sri Lanka and two years later was initiated into sannyasa by the renowned siddha yogi and worshiper of Siva, Gnanaguru Yogaswami (1872–1964) of Sri Lanka, regarded as one of the 20th century's most remarkable mystics.

For over five decades Subramuniyaswami, affectionately known as Gurudeva, taught Hinduism to Hindus and seekers from all faiths. In the line of successorship, he was the 162nd Jagadacharya of the Nandinatha Sampradaya's Kailasa Parampara and Guru Mahasannidhanam of Kauai Aadheenam (also known as Kauai's Hindu Monastery), a 382-acre temple-monastery complex on Hawaii's Garden Island. From this verdant Polynesian ashram on a river bank near the foot of an extinct volcano, Gurudeva's successor, Satguru Bodhinatha Veylanswami, and the monastics live their cherished vision, following a contemplative and joyous existence, building a jewel-like white granite Siva temple, meditating together in the hours before dawn, then working, while rainbows fill the sky, to promote Hinduism.

Gurudeva was lauded as one of the strictest and most traditional gurus in the world. His Hindu Church nurtures its membership and local missions on five continents. His educational institution, Himalayan Academy serves, personally and through its Hinduism Today magazine, books, courses and travel/study programs, serious seekers and Hindus of all denominations. Gurudeva's mission, received from his satguru, was to protect, preserve and promote the Saivite Hindu religion as expressed through its three pillars: temples, satgurus and scripture. That



mission is now carried forward by his monastic and family communities. The congregation of Saiva Siddhanta Church is a global fellowship of family initiates, monastics and students who follow the sadhana marga, the path of inner effort, yogic striving and personal transformation. Missionaries and teachers within the family membership provide counseling and classes in Saivism for children, youth and adults.

# Existence of the Lord Almighty (Pathi)

Sivakan , a 7 year old kid, was playing outside with his friends. One of his friends was confused on why God would create such small fruits on such a big tree. However one of these tiny fruits fell from the tree and fell on his head This made Sivakan's friend say "The creator must have been very thoughtful of such seemingly insignificant things! Now I can accept the necessity of an intelligent, independent creator of things in this world."

On listening to our friend's personal experience under the banyan tree we too rushed there with great reverence. Each one of us felt as if we ourselves personally experienced our friend's insight. All of us unanimously agreed that it is indeed the 'bodhi tree - tree of enlightenment'.

I recalled our teacher explaining about pramana (Alavai) - authentic means of knowledge or standard scale with which the nature of any particular thing can be established. They are perception, inference and scriptures.

Perception (Kaadchi Alavai): Means knowledge of an object by direct experience through our instruments of knowledge is called Kaadchi Alavai. Here in the conversation above, the knowledge of the toy aero-plane took place by direct perception of it.

Inference (Karuthal Alavai): Means by which the cause is inferred from the information



available for perception is called Karuthal Alavai. The knowledge of the picture of The Mahatma with his spinning wheel' being a photograph, in the earlier discussion was arrived at by inference.

Scriptures (Agama/Nool Alavai): Means of knowledge wherein the statements of experiences of great masters, sages and saints, authentically recorded is called as Agama or Nool Alavai. The knowledge of the 'picture of Lord Muruga' being a painting was established through authentic recording of the painter on the painting itself.

Each of the above mentioned three objects was made or created by someone. Similarly the mountain, river, plants and so on must have a creator who had created them.

The three incidents described about the lablab creeper, kittens and the old lady indicated that each one had three states of existence namely, appearance, sustenance and disappearance (birth, living and death).

These changes must have been affected by a controller. That same controller, being intelligent, created tiny fruits on the banyan tree, and huge pumpkins on the fragile creeper, knowing very well what to be borne by which plant and their outcomes. Therefore He alone is the all-knowing Lord Almighty (Muthalvan). Hence we unanimously ascertained the existence of the Lord Almighty and that 'even an atom cannot move without His presence'.

Saiva Philosophy Reference: The takeaway of this story is that authentic means of knowledge can be established through the tools of perception, inference and scriptures.

# தென்னாட்டு நிகழ்வுகள்



அப்பர் குருபூசை (03-05-2024)



'ஊரும் உறவும் எனது வாழ்வும்' நூல் வெளியீடு (19-04-2024)



சித்திரைத் திங்கள் நிறைமதி தென்புலத்தார் வழிபாடுகள் (23-04-2024)



சித்திரைத் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் (21-04-2024)



கனடா ரொரோன்ரோவில் தெய்வத்தமிழில் ஆண்டுத் திதி வழிபாடுகள் (09-05-2024)



சித்திரைத் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (23-04-2024)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து ஐந்தாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி அச்சகத்தில்" அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 விடை நல்லோரை வைகாசித் திங்கள் 10ம் நாள் நிறைமதி அன்று (23-05-2024 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org